
விலை ரூபா: 6.00 | பக்கங்கள் :-பத்து | Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2033 | மார்கழி 23 செவ்வாய்க்கிழமை (07.01.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 19



நேற்று தாய்லாந்தில் நடைபெற்ற நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ,அரச பிரதிநிதிகள் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

### தாய்லாந்தில் அரசு-புலிகள்

# சர்வதேச நிதியுதவி குறித்து நேற்றைய பேச்சில் ஆராய்வு

### உயர் பாதுகாப்பு வலயம் இன்று விவாதிக்கப்படும்

(பாங்கொக்கிலிருந்து அன்ரனிஜீவா)

**அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுத் தாய்லாந்தில் ஆரம்பமான சமாதானப் பேச்சுவார்த்தையில் யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கு கிழக்கின் பொருளாதார அபிவிருத்தி குறித்து விரிவாகப் பேசப்பட்டது.**

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான முதலாம் சுற்றின் நர்ன்காம் கட்டப் பேச்சு வார்த்தை நேற்று தாய்லாந்தின் நொக்கம் பத்தோம் நகரிலுள்ள ''றோஸ் கார்டின் ரிசோர்ட்'' ஹோட்டலில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமானது.

பேச்சுவார்த்தைக் குழுவின் அரச தரப்புப் தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்சும்,விடு தலைப்புலிகள் தரப்பின் குழுத் தலைவர் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கைலாகு கொடுத்து பேச்சுவார்த்தையைத் தொடங்கி வைத்தனர்.

கடந்த இருபது வருட கால யுத தத்தினால் அழிவடைந்த பொருளாதாரத்துறையை மீளச் சீரமைத்து, கட்டியெழுப்பும் வகையில், வடக்குக கிழக்கின் பொருளாதார அபிவிருத் தித் திட்டங்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதானக் குழு அமைக்க ஆளும்கட்சி எம்.பிக்கள் முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் நேற்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள், அரசின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டங்

(10ம் பக்கம் பார்க்க)

## உபகுழுக்களின் அதிகாரங்களை அதிகரிக்க அரசு -புலிகள் இணக்கம்

(பாங்கொக்)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நேற்று ஆரம்பமான நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தை யில்,பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு உபகுழுக்களின் அதிகாரங்க்ளை அதிகரிப்பதற்கு இணக்கம் காணப் பட்டுள்ளது.

நான்காம் சுற்றுப் பேச்சுவார்த் தைகளில் எடுக்கப்படும் முடிவுகளுக் கேற்ப விரைவான புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதால

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இம் மாதத்துடன் ஓய்வு

(கொழும்பு)

இலங்கைக்கான நேர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இம் மாதத்துடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலகம் தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகள் தூதுவராகக் கடமையாற்ற முடியுமெனினும்,ஜோன் வெஸபேர்க் ஆறு ஆண்டுகள் இலங்கைக்கான தூதுவராகக் கடமையாற்றியுள்ளார்.

தூதுவா பதவியிலிருந்து ஓய்வு பெறும இவர், தற்போது நடை பெறும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தையே இறுதப்பேச்சுவார்த்தை ஆகும என்பதும இங்கு குறிப்பிடத்தககது.

இதேவேளை இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் ஜோன்வெஸ்பேர்க் என்பதும் இனவாதிகள் அவரை நாடுகடத்த வேண்டும் எனக் கோரியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.(இ)

## உயர் பாதுகாப்பு வலயத்தை அரசு அகற்றக் கூடாது!

### ஜே.வி.பி. நாளை ஆர்ப்பாட்டம்.

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு கோருவது மனிதாபிமான கோரிக்கையல்ல. அதுவொரு அரசியல் ரீதியான தந்திரோபாயம்.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச நேற்றுத் தெரிவித்தார்.

ஜே.வி.பி நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப்புலிகளின் கோரிக்கையை ஏற்று அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுமேயானால் அது நாட்டுக்குச் செய்யும் பெருந் துரோகமாகும் என்று தெரிவித்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

## கலைப் பீட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி யாழ்.பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான கலைப்பீட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ்.பல்கலைக் கழகத்திற்கு நேற்றுக் கிடைத்துள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

### மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி

## வலி.வடக்கு பிரதேச செயலகம் முன் நேற்று மறியல், உண்ணாவிரதம்

(திருநெல்வேலி)

வலி வடக்கு மக்களை மீளக் குடியமர்த்தக் கோரி வலி வடக்கு மக்கள் ஒன்றிய ஏற்பாட்டில் நேற்று வலி வடக்கு பிரதேச செயலகம் முனபாக மறியல் மற்றும் உண்ணா விரதப் போராட்டம் இடம் பெற்றது.

கடந்த வெள்ளியன்று மேற்படி பிரதேச செயலகப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட வலி வடக்கு மக்கள் நேற்றைய தினம் செயலக வாயிலைப் பூட்டி காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை,தமது போராட்டம் இன்று தொடரும் என

(10ம் பக்கம் பார்க்க)

## இராணுவ-புலி தளபதிகள் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில், விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தளபதிகளுக்கும், படைத் தரப்பின் உயரதிகாரிகளுக்கும் இடையே, நேற்றுப் பிற்பகல் 2.45 மணி முதல் 4 மணி வரை, விசேட கலந்துரையாடலொன்று இடம பெற்றது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள விடுதலைப புலிகளின் நிர்வாகப் பிரிவு அலுவலகம்,கடந்த வெள்ளிக் கிழமை இரவு இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியமை, இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி காணாமல் போனமை மற்றும் மாற்று இயக்க உறுப்பினர்கள் காணாமல் போகின்றமை குறித்து விரிவாக ஆராயப் பட்டன.

இக்கலந்துரையாடலில் விடுதலைப்

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### விண்ணப்பப்படிவம

பிள்ளைகளை அறிந்து கொள்வோம் சொந்தத்தக வல்களைப் பதிவு செய்யும் ஆண்டு - 1 மாணவர்களுக் கான படிவம் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும், யாழ் மாவட்டத்தில் ஏனைய பிர பல்யமான புத்தக நிலையங் களிலும் பெற்றுக்கொள்ள லாம் என்பதை ஞானம்ஸ் நிறுவனத்தினர் அறிவித்துள் துளனர். (6432

### A|L 2005

A|L 2005 Batclh இற்கான General English வகுப்புகள் ஆரம்பம்: 8-1-2003 புதன் மாலை 4-00 மணி. அனு மதிக்கு பெற்றார் வருகை அவசியம், தொடர்பு கோ. சுப்பிரமணியம் 62. பழம் றோட் கந்தர்மடம், யாழ்ப் பாணம். (6431)

### நாளை சனிமாற்றம்

(08-1-2003 -11-4-2003) திருக்கணிதப்படி 03 மாதசனி வக்கிரமும் தைப்புத்தாண்டுப் பலாபலன்களும் எங்கும் விற் பனையாகின்றது கணிப்பா சிரியர் ''சத்யா'' 3ம் மைல் ஆனைக்கோட்டை. T P 021 2222753

(6427)

## இராசி பலன்

7 - 01 - 2003

மார்கழி 28 செவ்வாய்
பஞ்சமி பி. இ 3-25 வரை
சதயம் மு இ 9-11 வரை
இராகுகாலம் 3-32 - 502
சுபநேரம் 10.02-12 32

**மேஷம்**

தடைப்பட்ட காரியம் கை கூடும் உறவினர் வருகை தன வரவு கீர்த்தி

**இடபம**

பிறர் உதவி தொழில் முன் னேற்றம் முயற்சிகைகூடும் சுப நிகழ்ச்சி

**மிதுனம்**

ஆன்றோர் மதிப்பு உடல் உழைப்பு வீண் பயம் புதிய திட்டம்

**கடகம்**

வீண்தொல்லை போசன சுகம் பிரயாண பயம் முயற்சி தடங்கல்

**சிங்கம்**

சென்ற இடத்தில் செல் வாக்கு அபூர்வ சந்திப்பு குடும்பசுகம் நல்ல காரியம்

**கன்னி**

சத்துரு ஜெயம் தேக ஆரோக்கியம் காரியம் அனு கூலம், பிரயாணம்

**துலாம்**

குடும்பக்கவலை தொழில் முயற்சி மனச்சஞ்சலம் காரிய இடையூறு

**விருச்சிகம்**

மாணவர் கல்வியில் ஆர்வம் தன்னம்பிக்கைக்குறைவு முய ற்சி தாமதம் சயன சுகக் குறைவு

**தனுசு**

நல்ல முயற்சி வாக்கு மேன்மை புதிய பொருள் சேர்க்கை தனவரவு

**மகரம்**

மாதர் நட்பு கௌரவக் குறைவு பொருள் விரயம் முயற்சி தாமதம்

**கும்பம்**

பெரியோர் ஆசி நண்பர்கள் உதவி விருந்துபசாரம்முயற்சி கைகூடும்

**மீனம்**

தொழில் நிலை மாற்றம், சுபசெலவு பிதுர்சிந்தை முயற்சி தாமதம்.

பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது)

**வளவன்**

## நெடுஞ்சாலைகள் புனரமைக்க கலந்துரையாடல்

வடபகுதி நெடுஞ்சாலை களைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரை யாடல் நிதியமைச்சில் இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளி நொச்சி, மன்னார், முல்லைத் தீவு, வவுனியா மாவட்ட அர சாங்க அதிபர்கள் இக் கலந் துரையாடலில் பங்குபற்ற வுள்ளனர்.

இவர்களைத் தவிர வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் அதிகாரிகள் நிதி நிறுவ னங்களின் பிரதிநிதிகள் ஆகி யோரும் இதில் பங்குபற்றவுள் ளனர். (உ-8)

---



# யாழ்ப்பாணம்- மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் ஆகியவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீன் கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க் காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள் என்பவற்றை 01. 02. 2003 முதல் 31. 12. 2003 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவங்கள் வழங்கும் திகதி: 21. 01. 2003 செவ்வாய்க்கிழமை பி. ப 3. 00 மணி வரை

கேள்விகள் ஏற்கும் திகதி: 22. 01 2003 புதன்கிழமை- பி. ப 12: 30மணிவரை

கேள்விகள் திறக்கும் திகதி: 22. 01. 2003 புதன்கிழமை பி. ப. 2. 30மணிக்கு

கேள்விப் படிவக் கட்டணம்- ரூபா 300/- ஆகும். (வற் உட்பட).

### விபரம்

| சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் நீங்கலாக) |
|---|---|---|
| 1. புங்கன்குளம் சந்தை | 2500. 00 | 15000 00 |
| 2. அரியாலை சந்தை | 2500. 00 | 138600. 00 |

**இறைச்சிக் கடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. நாவாந்துறை மாட்டிறை கடை | இல. 7 | 2500. 00 | 8900. 00 |
| 2. நாவாந்துறை மாட்டிறை கடை | இல. 8 | 1500. 00 | 5100. 00 |
| 3. நாவாந்துறை மாட்டிறை கடை | இல. 9 | 1500. 00 | 5100. 00 |
| 4. அரியாலை மாட்டி. கடை | இல. 1. | 2500 00 | 40100. 00 |
| 5. அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல. 2 | 2500. 00 | 18900. 00 |

**கருவாட்டுக்கடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. பண்ணை கருவாட்டுக் கடை | இல. 2 | 2500 00 | 10200. 00 |
| 2. பண்ணை கருவாட்டுக்கடை | இல. 3 | 2500. 00 | 10200. 00 |
| 3. பண்ணை கோழிக்கடை | இல. 7 | 2500. 00 | 20000. 00 |
| 4. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 11 | 1500. 00 | 3250. 00 |
| 5. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 1500. 00 | 3250. 00 |

**குறிப்பு:-** பாசையூர்ச் சந்தையை 11. 01. 2003 முதல் 31. 12. 2003 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக எதிர்வரும் 10. 01. 2003ந் திகதி மு. ப 10. 30மணிக்கு ஏலத்தில் விடப்படவுள்ளது.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் ரூபா 2500/ஐ பிணைப்பணமாக சபையில் செலுத்தி பங்குபற்றுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**இ.இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003. 01. 06

(C/ 5512)





வலி. கிழக்கு பிரதேச சபை நீர்வேலி

# நீர்வேலி, கோப்பாய், புத்தூர், அச்சுவேலி உரும்பிராய் உப அலுவலகங்கள்

### 01 ஆதனவரி அறிவித்தல் : 2003

1987ம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல. 15இன்கீழ் அதற்குஉரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக, ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2003ம் ஆண்டு அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2003ம் ஆண்டுக்கான ஆதனவரியை31-01-2003ம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு, அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப் படும், ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதலாம் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும, வெற்றுக்காணிகளுக் கும் 15% மும், ஏனைய ஆதனங்களுக்கு 20 % மும் விறாந்துக்கட்டணமாகவரியுடன் சேர்த்துச் செலுத்தப் படவேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுத்குரிய வரிகளை 31-01-2003ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலு த்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக் குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:

01. 2002ம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2003ம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.

02. சேதமடைந்தும்; காலியாகவுள்ளதுமான ஆத னங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31-01-2003க்கு முன் கிடைக் கக்கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

03. ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது; ஆதன உரிமையாளர்களும், அவர்கள் இல்லாதவிட த்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந் தப்பட்ட உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு, நிலுவைகளைச் செலுத்தி எம்மு டன் ஒத்துழைககுமாறு கேட்டுக்கொள்கின் றேன்.

### 02. வீடமைப்பு, நகர சீர்திருத்தக் கட்ட ளைச் சட்டம் பிரிவு 268இன் பிரகார மான அறிவித்தல்

வலி.கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டிடங்கள் மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்; ஆகவே கட்டிடங்கள், மதில் மலகூடங்கள் என்பன கட்டுவ தற்கும், பழையனவற்றைப்புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப் பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வலி கிழக்கு பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன், முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டிடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையி னால் அகற்றப்படும் என அறியத்தருகின்றேன்.

### 03. 2003ம் ஆண்டுக்கான வியாபார உரிமம்

வலி கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சகல வர்த் தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக் கான விண்ணப்பபத்திரத்தை வலி. கிழக்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களில் பெற்று 31-01-2003ம் திகதிக்கு முனனர் பூர்த்தி செய்து காரியாலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்; மேலும் 2003ம் ஆணடு பங்குனி 31ம் திகதிக்கு முன்னர் உரிமக் கட்டணத்தைச் செலுத்தி வியாபார உத்தரவுப் பத் திரத்தைப் பெற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள் கின்றேன், 31-03-2003ம் திகதிக்குப் பின்னர் வியா பார அனுமதிப்பத்திரமின்றி எதுவித வர்த்தக நிலை யங்களும் அனுமதிக்கப்படமாட்டாது என அறியத் தருகின்றேன்.

### 04. படவரைஞராகப் பதிவு செய்தல்

2002ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்தவர் கள்தங்கள் அனுமதியை31-01-2003ம்திகதிக்கு முன்னர் புதுப்பித்துக் கொள்ளுமாறும் புதிதாகப் பதிவு செய்ப வர்கள் மேற்படி திகதிக்கு முன்னர் அதற்கான ஆவ ணங்களைச் சமர்ப்பித்து சபையில் அனுமதி பெற்று பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**பூ. குணசிங்கம் (ஜே. பி. யு. எம்)**
தலைவர்
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி,

(சி 5606)

## நோர்வேயில் நம்பிக்கை உள்ளபோதும்

# சமாதானம் குறித்த சந்தேகம்

# சிங்கள மக்களிடம் வலுவடைவு

## மாற்றுக் கொள்கைகளுக்கான மைய கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

**சமாதானம் விரைவில் ஏற்படும் என்னும் நம்பிக்கை கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இருந்ததிலும் பார்க்க இப்பொழுது மக்களிடம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது, முக்கியமாக சிங்கள மக்களிடம் சமாதானம் பற்றிய சந்தேகம் எழுந்துள்ளது.**

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம் திகதியுடன் முடிவடைந்த 3 வாரங்களில் நடத்திய கருத்துக் கணிப்பின் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கருத்துக் கணிப்புக் குறித்த மேற்படி அறிக்கையில் மேலும்

சமாதான பேச்சுக்கள் பற்றிய ஆதரவுக்கருத்துக்கள் உச்ச அளவிலேயே உள்ளன. செப்டெம்பர் 2002 இல்இருந்ததிலும் பார்க்க இப்பொழுது நம்பிக்கை குறைவடைந்ததற்கு காரணம் புலிகள் மக்களைப் பேய்காட்டுவதற்காகவே பேச்சுக்களில் ஈடுபடுகிறார்கள் என்று பரப்பப்பட்டு வரும் வதந்திகளாகும்.

ஆனாலும் யுத்தத்தை வெல்ல முடியாத நிலையிலேயே புலிகள் பேச்சுக்கு முன் வந்தனர் என்ற நம்பிக்கை சிங்கள மக்கள் மத்தியில் உயர்வாகவே உள்ளது

நோர்வே சமாதான முயற்சிகளின் அனுசரணையாளராக தொழிற்பட வேண்டும் என்ற நம்பிக்கை 2002 யூனிலிருந்து அதேயளவாகவேயிருக்கிறது. ஏனைய இனங்களில் அபிப்பிராயங்களுடன் ஒப்பிடும் போது நோர்வேயின் அனுசரணையை பெறவேண்டும் என்ற ஆவல் சிங்கள மக்கள் மத்தியில் குறைவாகவே காணப்படுகிறது.

2002 யூனிலிருந்துநோர்வே கண்காணிப்புக்குழு நடு நிலையாக தொழிற்படுகிறது. என்ற அபிப்பிராயத்தை மறுப்பவர்களின் தொகை வளர்ந்துவந்தாலும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் சமுதாயங்கள் மத்தியில் அதிக நம்பிக்கையே வளர்ந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## உடுவில் இக்கிராமன் நலன்புரி முகாமில் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

உடுவில் இக்கிராமன்நலன்புரி முகாமில் மிகுந்த சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி முகாமில் 19 குடும்பங்கள் தங்கியுள்ள போதிலும் போதிய குடிநீர் வசதியோ மலசலகூட வசதியோ ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் இங்கு தங்கியுள்ளவர்கள் மிகுந்த இடர்களை எதிர்கொள்வதுடன், தொற்று நோய் அபாயத்தையும் எதிர் நோக்கியுள்ளனர். (உ-6)

## பொங்கல் - 2003 வர்த்தகக் கண்காட்சி வெள்ளியன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி வர்த்தக நிறுவனங்களுடன் இணைந்து யாழ் வணிகர் கழகம் நடத்தும 'பொங்கல் 2003' மாபெரும் வர்த்தகக் கண்காட்சி யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது:

இக்கண்காட்சியில் யாழ் உள்ளூர்உற்பத்திப் பொருட்கள் உணவு, விவசாய, ஆடைஅலங்காரப் பொருட்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன

தவிர, இந்தக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் உள்ளூர் உற்பத்தி நிலையங்களுக்கு இலவச இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. (உ-6)

## சிவத்தமிழ் செல்வியின் பிறந்த நாள் அறக்கொடை விழா இன்றும் நாளையும்

(ஏழாலை)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 78 வது பிறந்த நாள் நிகழ்வுகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன:

இன்று மாலை 3.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் உள்ள அன்ன பூரணி மண்டபத்தில் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் 78 வது பிறந்த நாள் அறக் கொடை விழா நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், வரவேற்புரையை பதில் நீதிவான் மு.சபாநாதனும் ஆசியுரைகளை சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருமதி கோகிலா மகேந்திரன், கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேரறிஞர் ''கவிக்கோ'' அப்துல் ரகுமானின் ''கூடும் அன்பு'' எனும் தலைப்பிலான சிறப்பு சொற் பொழிவும் இன்று இடம் பெறவுள்ளது.

மேலும் நாளை புதன்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வுகள்காலை, மாலை என இரு அமர்வுகளாக நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன;

காலை நிகழ்வுகள் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையிலும் மாலை நிகழ்வுகள் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையிலும் நடைபெறவுள்ளன.

''கவிக்கோ'' அப்துல் ரகுமானின் சிறப்பு சொற்பொழிவுகளும் காலை மாலை நிகழ்வுகளில் இடம் பெறவுள்ளன.

நாளை காலைநடைபெறும் நிகழ்வில் பிறந்த நாள் அறக்கொடை நிதிவட்டிப் பணத்திலிருந்து ரூபா 60 ஆயிரம், தீவக கல்வி வலயத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சுமார் 150 க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு பாடசாலைக் கல்விக்கான உபகரணங்களுக்கான உதவு தொகையாக வழங்கப்படவுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது. (உ-12)

## மூதூர் மீனவர் மரணம் கடற்படைப் படகின் மாலுமிக்கு பிடிவிறாந்து

(கொழும்பு)

மூதூர் கொட்டியாரக்குடா கடற்பிரதேசத்தில் கடந்த செவ்வாயன்று மீனவர் ஒருவர் பலியானமை தொடர்பாக மோதிய கடற்படைப் படகையும் மாலுமியையும் கைதுசெய்து மூதூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் பொலிஸாருக்கு பணித்துள்ளார்.

இச்சம்பவத்தில் பலியான மீனவருடன் மீன்பிடித்துக் கொண்டிருந்த காயங்களுக்கு இலக்கான மற்றைய மீனவர்கள் அளித்த சாட்சியங்களின் அடிப்படையிலேயே நீதிவான் இவ் உத்தரவை விடுத்துள்ளார்.

மூதூர் கடற்றொழிலாளர் படகுடன் கடற்படைப்படகு மோதியதில் மேற்படி மீனவர் ஒருவர் பலியானதைத் தொடர்ந்து அப்பகுதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் அமைச்சர் ஹக்கீம் அங்குசென்று விசாரணைகளை உடன்நடத்துமாறு பணிப்புரை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பாதுகாப்பு உப-குழுவின் கூட்டம் அக்கரைப்பற்றில்

(கொழும்பு)

தாய்லாந்து பேச்சுவார்த்தைகளுக்கு அமைய அமைக்கப்பட்ட பாதுகாப்பு உப குழுவின் அம்பாறை மாவட்டத்துக்கான கூட்டம் நேற்று முன்தினம் அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார மண்டபத்தில்நடைபெற்றது.

அம்பாறைமாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவர் கார்ள்எலிசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்,

அரசாங்கத் தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பிரிகேடியர் எஸ். ஆர் பாலசூரிய, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அப்துல் மஜீத்உட்பட 9 பேர் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் மட்டு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியலதுறைப்பொறுப்பாளர் பாபா, மற்றும் முக்கிய உறுப்பினர்களானறமேஸ், சீதா ஜனார்த்தனன் உட்பட 9 பேர் கலந்து கொண்டனர். (உ-08)

## ஆய்வு கூடங்கள் மீளமைப்பு

(கொழும்பு)

அனைத்து வைத்தியசாலைகளின் ஆய்வு கூடங்களும் இவ் வாண்டு திருத்தி அமைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர்நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான வைத்திய சாலைகளில் தேவைப்படும் ஆய்வுவசதிகள்இல்லாத காரணத்தால்தான் குறிப்பிட்ட நோயாளர்களை வேறு வைத்திய சாலைக்கு இடம்மாற்றம் செய்யவேண்டிய சூழ்நிலை உருவாகிறது

இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே சுகாதார அமைச்சு இந்நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்கு தேவைப்படும் நிதியின் ஒரு பகுதியினை வழங்க உலகசுகாதாரநிறுவனம் முன்வந்துள்ளது (உ-8)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தில் இன்று காலை 9. மணிக்கு தரம் i மாணவர்களை, தரம் ii மாணவர்கள் அன்புடன் வரவேற்கும் கால்கோள் விழா பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை நூலகத்திற்கு இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், ஆறு. திருமுருகன். இடைக்காடு வேல். சுவாமிநாதன். சிவ.மகாலிங்கம் ஆகியோர் ஒரு தொகுதி ஆன்மீக நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (உ)

## நல்லதோர் தீர்வை என் இனத்திற்கு பெற்றுக்கொடுக்க முடியும்

### மு.கா.தலைவர் பேச்சுக்கு செல்லமுன்பேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனும அரசாங்கத்துடனும பேசி நல்லதொருதீர்வை முஸ்லிம்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியுமென்ற ஆழமானநம்பிக்கை எமக்கு உண்டு.

இவ்வாறு முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நான்காம் சுற்று சமாதான பேச்சுவார்த்தைக்குப் புறப்படுவதற்கு முன்னர் செய்தியாளர்களுக்கு வழங்கியபேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்:

அவர்மேலும் தெரிவிக்கையில்; முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அரசும் விடுதலைப்புலிகளும் தூரத்தில் வைத்தே பேசுகின்றன என்ற தோற்றம் எமக்கு ஏற்படுகிறது.

இருந்தபோதிலும் முஸ்லிம்களின் பிரச்சினைகளை விரிவாக ஆராய்வதற்கு முஸ்லிம் புத்திஜீவிகள் மூன்றுபேர் இப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவது எமக்குக்கிடைத்த பெருவெற்றியாகும்.

பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென விடுதலைப்புலிகள் விரும்புகின்றனர்.

தமிழர்களால் முஸ்லிம்கள் எவ்வாறு விமர்சிக்கப்பட்டாலும் முஸ்லிம்கள் தமது நியாயமான உரிமைகளைப் பெற்றுவாழ புலிகள் உந்து சக்தியாக இருப்பர்என்ற நம்பிக்கைஇருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் அல்ஜீரியாவில் 43படையினர் பலி

(அல்ஜீயர்ஸ்)

அல்ஜீரியாவின் வடக்குப் பகுதியில் இஸ்லாமியத் தீவிர வாதிகள் நடத்திய திடீர்த்தாக்குதலில் 43படைவீரர் பலியாகியுள்ளனர்.

அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜீயர்ஸிற்கு 400கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மலைத் தொடர்அருகே இராணுவ வாகனத்துடன் படையினர் சென்று கொண்டிருந்த வேளை இஸ்லாமியத் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் அவ்வாகனத்தில்சென்ற 43படையினரும் பலியாகியுள்ளனர்.

அல்ஜீரிய இராணுவத்தினருக்கு எதிராக நடத்தப்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகளின் மிகப் பெரிய தாக்குதல் இதுவெனக் கூறப்படுகின்றது.

இதேவேளை அல்ஜீயர்ஸிற்குத்தெற்குப் பகுதியில் இடம் பெற்ற இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய மற்றுமோர் தாக்குதலில் 13பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் உத்தியோக பூர்வதகவல்கள் தெரிவிக்கின்றன. (பி-2)



பிரிட்டனைச் சேர்ந்த ஆன்ட்கு கூனே (23) 52நாட்களில் 730மைல்கள் பயணம் செய்து ஜனவரி-2ஆம் திகதி தென்துருவத்தை அடைந்தார். தென் துருவத்துக்கு இதுவரை சென்றவர்களில் இவர்தான் மிகவும் இளையவர்.

## ஈராக் விவகாரம்பற்றி எகிப்திய ஜனாதிபதியுடன் துருக்கிப் பிரதமர் ஆலோசனை

(அங்காரா)

உலகநாடுகளின் பார்வையை தன்பக்கம் திருப்பியுள்ள ஈராக் பிரச்சினையை தீர்த்துவைப்பது தொடர்பாகத் துருக்கிப் பிரதமர் அப்துல்லாசூல் எகிப்து ஜனாதிபதி கௌஷ்னி முபாரக்குடன் பேச்சு நடத்தியுள்ளார்.

செங்கடல் பகுதியிலுள்ள பிரபல உல்லாச விடுதியொன்றில் இந்தப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

இதன்போது ஈராக்கின் பிரச்சினைக்குச் சமாதான முறையில் தீர்வுகாண்பதே நல்லதென இருவரும் வலியுறுத்தியுள்ளனர். (பி-2)

## வலதுசாரி வேட்பாளர் தேர்தலில் வெற்றி

(வில்னியர்ஸ்)

லிதுவேனியாவின் அடுத்த ஜனாதிபதியை தீர்மானிப்பதற்கு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வலதுசாரி வேட்பாளர். டொரான்டாஸ் பக்ஸாஸ் வெற்றி பெற்றுள்ளார்.

லிபரல் ஜனநாயக கட்சியின் வேட்பாளரும் முன்னாள் பிரதமருமான 46வயதான இவர் 55வீதவாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளாரென்று லிதுவேனிய தேர்தல் ஆணையாளர் செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் 22ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் அல்லாடாஷ் அடம்ஷிற்கு 35வீத வாக்குகளும் வலது சாரி விடுதலை ஜனநாயக கட்சி வேட்பாளர் லாடான்டோ பக்ஸாஷிற்கு 19வீத வாக்குகளும் கிடைத்திருந்தன.

இவ்விருவரில் எவருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால் இரண்டாம் கட்டவாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

கடந்த 5ஆண்டுகளாக லிதுவேனியாவின் ஜனாதிபதியாக இருந்துவந்த எந்தக் கட்சியையும் சாராத 76வயதான பல்டாவ் அட்கம்சிற் இம்முறையும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவாரென எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

## ஜேர்மனியில் 3மில்லியன் அரச ஊழியர் வேலை நிறுத்த முஸ்தீபு

(பேர்லின்)

அரசாங்க ஊழியர்களின் இணக்கத்திற்கு அமைய சம்பள உயர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு நியாய சபையினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை ஜெர்மன் அரச தொழில் வழங்குநர்கள் நிராகரித்துள்ளனர்.

இதன் காரணமாக ஜெர்மனியில் 3மில்லியன் அரச ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென்ற நியாய சபையில் கோரிக்கை தொடர்பாக அரசாங்க தொழில் வழங்குநர் சார்பில் நியாய சபைப்பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்த பேசசுவார்த்தை நேற்று அதிகாலை வரை நீடித்திருந்ததென நியாய சபையின் தலைவர் கூறியுள்ளார்.

அரசாங்கத் தொழிலாளர்களுக்கு இவ் வருடம் 2.4வீத சம்பள உயர்வும், அடுத்த வருடம் 6மாதங்களுக்கு நீடிக்கும் வகையில் தசம் 6வீத சம்பள உயர்வும் வழங்கப்படவேண்டுமென நியாயசபை அரச ஊழியர்கள் சார்பில் பிரேரணையை முனவைத்தபோதும் அதனை தொழில் வழங்குநர் சார்பில் பேசிய நியாயசபை பிரதிநிதி ஹிந்து லீமன் குரூப் முற்று முழுதாக நிராகரித்துள்ளனர். (பி-2)

## ஐரோப்பிய நாடுகளில் இயற்கை அனர்த்தங்களால் 500 பேருக்குமேல் மரணம்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பெரும்இயற்கை அனர்த்தங்களால் 500 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர், பல ஆயிரக்கணக் கானோர் இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தங்களில் போலந்து, ரஷ்யா ஆகிய நாடு களில் மட்டும் 406பேர் கடும் குளிரினாலும், மழையினாலும் உயிரிழந்துள்ளனர்.

மற்றும் பிரிட்டன் ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், போர்த்துக்கல் உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன என்றும் இங்கும் பல பேர் இறந்துள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை இந்த நாடுகளில் தொடர்ந்து பெய்துவரும் கடும்மழை இன்னும் தொடருமென வானிலை ஆய்வாளர்கள் மக்களை எச்சரித் துள்ளனர். .

இதனால் மின்சார சேவையை பிரான்ஸ் துண்டித்துள்ளதால் 3லட்சத்துக்கும் மேற்பட்டோர் அங்கு மின்சாரம் இன்றி அல்லற்படுவ தாகவும் பிரான்ஸிலுள்ள சார்ள்ஸ் டிபோ விமான நிலையத்துக்கான சகல போக்குவரத்துகளும் தற்காலி கமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படு கிறது. (பி.2)

## அமெரிக்க - வடகொரியச் சிக்கலை ரஷ்யா ராஜதந்திர முறையில் தீர்த்துவைக்க விருப்பம்

(மொஸ்கோ)

சர்ச்சைக்குரிய வடகொரியாவின் அணு ஆயுதச் சிக்கலை முடிவுக்குக் கொண்டுவர இராஜதந் திர முறையில் தனது செல்வாக் கைப் பயன்படுத்திக் கொள்ளப் போவதாக ரஷ்யா கூறியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வடகொரியாவுடன் வாஷிங்டனில் . தனிப்பட்ட முறையில் கூடி ஆராயவுள்ளதாகவும், ஜப்பான், தென் கொரியா நாடுகளுடனும் இது தொடர்பாக கலந்தாலோசிக்க வுள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

அணு ஆயுதத் திட்டம் தொடர்பாக அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்குமிடையே தோன் றியுள்ள நெருக்கடி நிலையை தீர்த்து வைப்பதற்கென தென்கொ ரியா தனது ஜனாதிபதியின் ஆலோசகரை ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் அனுப்பிவைக்க வுள்ளதாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தது. (பி.2)

## கிராமங்களில் புகுந்து யானைகள் அட்டகாசம்

### பங்களாதேஷில் சம்பவம்

(டாக்கா)

வங்கதேசத்தில் ஒரு கிராமத்துக்குள் 10 காட்டு யானைகள் நுழைந்து, வீடுகளைத் தாக்கி சேதப்படுத்தின. யானைகளிடமிருந்து தப்பிக்க ஓடிய 7 பேர் காயமடைந்தனர்.

தென்கிழக்கு வங்கதேசத்தின் மலைப்பகுதி மாவட்டமான வந்தர் வனத்தில் உள்ள குமரி என்ற கிராமத்துக்குள் யானைகள் புகுந்தன அப்போது மக்கள் தூங்கிக் கொண்டு இருந்தனர். மூங்கில்களால் அமைக்கப்பட்ட அவர்களது வீடுகளை அவை நாசமாக்கின. அதில் 30 வீடுகள் சேதமடைந்தன. (பி)

### ஈராக்பற்றி போப்பாண்டவர் கவலை

(வத்திகான்)

ஈராக் தாக்கப்படக்கூடும் என்ற தகவல்கள் அடுத்தடுத்து வரத்தொடங்கியதை அடுத்து போப்பாண்டவர் இரண்டாவது ஜான் பால் மிகவும் கவலை அடைந்திருக்கிறார்.

இதை ஆர்ச்பிஷப் ரெனடோ மார்ட்டினோ, வத்திக்கானில் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் அமைதி ஏற்பட வேண்டும் என்று போப்பாண்டவர் கடந்த இரு வாரங்களாகக் கோரிக்கை விடுத்து வருகிறார் என்பது தெரிந்ததே. (பி)

### விண்வெளி செல்லும் முதல் இஸ்ரேலியர்

(ஹூஸ்டன்)

இஸ்ரேல் முதன்முறையாக தனது நாட்டைச் சேர்ந்த கர்னல் இலன் ரமோன என்பவரை விண்வெளிக்கு அனுப்புகிறது.

ஜான்சன் விண்வெளிமையத்திலிருந்து வரும் 16ஆம் திகதி புறப்படும் அமெரிக்க விண்வெளி ஓடமான 'கொலம் பியாவில்' அவர் செல்கிறார். (பி-2)



சென்னையில் மாநகராட்சி சமுதாய மையத்தில் நடைபெற்ற சணல் பெருட்கண் காட்சியில் சணலினால் ஆக்கப்பட்ட பிள்ளையார் படத்தையே காண்கிறீர்கள்.



படத்தில் காணப்படுவது ஏதோ போர் முனை போன்று உள்ளது அல்லவா? உண்மையில் இது தென் கொரியா தலை நகர் சியோலிலுள்ள போர் ஆயுதங்களுக்கான அருங்காட்சியகம்.

# இன்று ஒரு தகவல்

## நன்னயம் திருத்தியது

நம்மிடம் ஒருவன் தப்பாக நடந்து கொண்டான் என்றால் உடனே நாம் என்ன செய்வோம். கையை ஓங்கிக் கொண்டு அவனை அடிக்கப் போவோம். நாமும் அவனிடம் அவனை விட ஒரு மேலாகத் தப்பாக நடந்து கொள்வோம் ஆனால் பெரியவர்கள் எல்லாரும் அப்படி நடந்து கொள்வதில்லை. 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாணநன்னயம்செய்துவிடல்' என்று வள்ளுவர் சொன்னார் அல்லவா? அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்வார்கள்.

பாயஸீத பிஸ்தாமி என்பவர் ஒரு பெரியஞானி அவர் ஒருநாள் இரவு வெகுநேரம் மசூதியில் இருந்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வழியிலே ஒரு குடிகாரன், அவன் கையிலே ஒரு இசைக்கருவி. அதைக் கன்னா பின்னா என்று மீட்டிக் கொண்டு வாய்க்கு வந்த படி எதனையோ பாட்டென்று நினைத்துப் பாடிக் கொண்டிருந்தான். அத்துடன் இருந்தாலும்பரவாயில்லை. அந்தப் பக்கமாக வழியில் வருபவர்கள் போகிறவர்கள்எல்லாரையும் பார்த்துக்கன்னாபின்னா என்று திட்டிக் கொண்டிருந்தான்.

பாயஸீத் அந்த வழியாகப் போகிறார் அவனைப் பார்க்கிறார். அவனுடைய நிலைமையைக் கண்டுபரிதாபப்படுகிறார். 'ஏனப்பா இதுமாதிரியெல்லாம் நடந்து கொள்ளலாமா?' என்று ஏதோ கொஞ்சம், புத்திமதி சொல்ல ஆரம்பித்தார்- அவனுக்குக் கோபம் வந்து விட்டது; கையில் வைத்திருந்தானல்லவா வாத்தியக் கருவி அதனால் அந்தப்பெரியவர் தலையில் ஓங்கி அடித்து விட்டான்; இரத்தக்காயம் ஏற்பட்டு விட்டது. அவன் கையில் இருந்த இசைக் கருவியும் அடித்த வேகத்தில்இரண்டாக உடைந்துபோயிற்று. அவ்வளவு வேகமாக அடித்திருக்கிறான்;

இவ்வளவு தூரம் நடந்து போயும் அந்த மாபெரும ஞானி வாயைத்திறந்து ஒரு வார்த்தைகூடப்பேசவில்லை. பேசாமல் தலையைப் பிடித்துக் கொண்டே போய் விட்டார். மறுநாள் அந்தப் பெரியவர், என்னபண்ணினார்; தெரியுமா? கொஞ்சம் இனிப்புப் பண்டங்கள். கொஞ்சப் பணம் ஆகியவற்றை ஒரு ஆள் மூலம் அந்தக் குடிகாரனுக்கு அனுப்பி வைத்தார். அவனுக்கு ஒன்றும்புரியவில்லை. என்ன விபரம்என்று விசாரித்தான். வந்த ஆள் ஒரு கடதாசியை நீட்டினார்; அதிலே விபரம் இருந்தது ஞானி எழுதியிருந்தார்; 'உங்களுடைய இசைக்கருவி உடைவதற்கு என்னுடைய தலை காரணமாக இருந்து விட்டது. அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகின்றேன்; அதற்காகத் தான் பணம் அனுப்பியுள்ளேன். புதிதாக ஒன்றை வாங்கிக் கொள்ளுங்கள். இன்னொரு விஷயம். நேற்றிரவு என்னிடம் ஏகப்பட்ட கசப்பான வார்த்தைகளை நீங்கள் பேசியதாகஎண்ணுகின்றேன். இத்துடன் அனுப்பியிருக்கிற இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட்டு, உங்கள் நாவிலுள்ள கசப்பை மாற்றிக் கொள்ளுங்கள்' என்ற விபரம் அந்தக்கடதாசியிலிருந்தது;

இந்தச் சமயத்தில்அவன்குடிமயக்கமின்றித் தெளிவுடன் இருந்தான்; அதைப்படித்தவுடன் அவனுக்குமிகவும் வெட்கமாய்ப் போய் விட்டது தலையைக் குனிந்து யோசித்தான்: கொஞ்சநேரத்தில் தன்னுடைய நண்பர்கள் சிலரையும் கூப்பிட்டுக் கொண்டு அந்த ஞானி இருக்கின்ற இடத்துக்குத் தேடிப் போனான். அவரிடம் மன்னிப்புக் கேட்டான். 'பெரியவரே! தெரியாமல் நான் இந்தப்பாவச்செயலைப் பண்ணிவிட்டேன்? என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்; உங்களுடைய பொறுமையும், போதனையும் என்னுடைய கண்ணைத் திறந்து விட்டது. இனிமேல்நானும்என்னுடைய நண்பர்களும் நல்ல வழியிலே திருந்தி வாழப் போகிறோம்' என்றான்; ஞானி செய்த 'நன்னயம்' குடிகாரனை எப்படித் திருத்தியிருக்கிறது பார்த்தீர்களா?

இந்தக் கதையைக் கேட்டு விட்டு ஒருவர் 'என்வாழ்க்கையிலேகூட அப்படி ஒருசம்பவம் நடந்தது சார்; நானும் ஒரு நாள் இரவு அளவுக்கு மிஞ்சிக் குடித்து விட்டு ஒரு கிட்டாரை வைத்துக் கொண்டு கன்னா பின்னா என்றுஉளறிக்கொண்டும் திட்டிக் கொண்டும் இருந்தேன். அந்தச் சமயம்,

அந்த வழியாக ஒருவர் வந்தார். ஓங்கித் தலையிலே ஒரே அடி இரத்தம் வந்து விட்டது அதன்பின்னர் என்மனது திருந்தி விட்டதுசார்! 'என்று சொன்னார். அப்படியா? என்றேன் ஆச்சரியமாக! 'ஆமாம் சார்! அடி விழுந்தது அவருடைய தலையிலல்லஎன்தலையிலே சார்! வந்தவர் என்னை அப்படிஅடித்துவிட்டார் சார்! மயக்கம் தெளிந்த பின்னர் எனக்கு விபரம்புரிந்தது; அவர் ஒரு பொலிஸ்காரர்' என்றுமிகவும் சோகமாகச் சொன்னார்;

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு

### பேச்சில் ஆராயப்படும் என்கிறார் பீரிஸ்

தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் போதுநாட்டின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டுஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வினை மேற்கொள்வது தொடர்பாகவேஆராயப்படும் என அரசியல் விவகாரஅமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்;

நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் அதிகாலை விமான நிலையம் சென்ற வேளை அங்கு செய்தியாளர்கள் மத்தியிலேயே அமைச்சர் இதனைத்தெரிவித்துள்ளார்;

அமைச்சர் பீரிஸ் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்; இருதரப்பினருக்கும் இடையேயான பேச்சுக்களின்போதுமிகவும் சிக்கலான பிரச்சினைகள் ஏற்படலாம்;

எவ்வாறாயினும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்குகுந்தகம் ஏற்படாத வகையில், நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய தீர்வுகளைக்காண்பதற்கான சாத்தியக் கூறுகள் இம்முறை பேச்சுவார்த்தைகளில் தோன்றலாம் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்;

இவை தவிர மனிதாபிமான அடிப்படை உதவிகள் குறித்தும் அங்கு ஆராயப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

இதேவேளை, பேச்சுக்களின் போது அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் சம்பந்தமாகவே முக்கியமாகஆராயப்படவிருப்பதாக புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டிருப்பதுஏற்கனவே தெரிந்ததே; (க-08)

### வலி. வடக்கு மீள் குடியேற்றம்

# மனிதாபிமான அடிப்படையில் அரசு செயற்பட வேண்டும்

## மாவை எம். பி. கோரிக்கை

(தென்மராட்சி)

வலிகாமம் வடக்கில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் பிரச்சினையில் இராணுவம் முடிவு எடுக்க முடியாது. அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் அகதிகளாக்கப்பட்டமக்களை மீளக்குடியமர்த்த உடனடியாக முடிவு எடுக்க வேண்டும் தவறும் பட்சத்தில் நாம் மக்களைத் திரட்டி ஜனநாயக வழியில் போராட வேண்டிய நிலை உருவாகும் எனப் பகிரங்கமாகக் கூறுகின்றேன்.

இவ்வாறு தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நடாத்தப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில்சமுகமளித்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். சிவமகாராசா தலைமையில் அங்கு இடம் பெற்ற உண்ணாவிரதப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தொடர்ந்து உரையாற்றும் போது;

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக காங்கேசன் துறைத் தொகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச மக்கள் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் போர் நடவடிக்கைகள் காரணமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் அவர்களில் பல ஆயிரக்கணக்கான மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகள் முகாம்களில் வாழ்ந்துவருகின்றனர். குறிப்பாக குடாநாட்டில் முப்பது சதவீதமான நிலப்பரப்பு அதியுயர் பாதுகாப்பு வலயம் என ராணுவத்தால் தன்னிச்சையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு கிடக்கின்றன. மீனவர்கள் தமது பிரதேசங்களில் சுதந்திரமாக மீன் பிடிக்க முடியாமல் இருக்கின்றனர் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கின்றனர். இதனால் அகதிகளாக்கப்பட்ட மக்கள் அன்றாட வாழ்வுக்கு அவதியுறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்;

பிரதமர் ரணிலும் புலிகளின் தலைவர் பிரபாவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு கிட்டத்தட்ட ஒருவருடம் ஆகிறது. குறிப்பாக வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தளபதியாக இருந்த பலகல்ல வலிகாமம் வடக்கில் பெரும்பாலான பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு உடன்பாடாயிருந்தார்.

ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இராணுவம் ஏற்கனவே இணக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக் குடியமர மறுப்பதுதான் இன்று ஆச்சரியத்தை தருகிறது;

இது தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களது சொந்தப் பூமியில் வாழ முடியாத பிரச்சினை மட்டுமல்ல இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகும் அதைவிட இந்தப்பிரச்சினையைராணுவ ரீதியாக அணுகுவது மிகவும் தவறானதாகும்;

யுத்த நிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் இருக்கின்றபோது இயல்பு வாழ்க்கை உருவாக்கப்பட வேண்டும் என்ற தத்துவமே இன்றைக்கு தாக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்ட போதிலும் தமிழ் மக்களுடைய பாதுகாப்புக்கு தமிழ் மக்களின் படை அமைப்பு அவசியம் என்ற கொள்கையை நாம் கொண்டிருக்கிறோம் ஆனபடியால் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென குரல் எழுப்புவதும் அதற்கும் பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா நிற்பதும் சமாதான முயற்சியை முறியடிப்பதற்கான முனைப்பாகும்;

பேரினவாத சக்திகள் எவ்வாறு முயற்சித்தாலும் இன்றைய நிலையில் எமது மக்கள் தொடர்ந்தும் அகதிகளாக வாழ்ந்துகொண்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (க-77)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொழிற்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலகத்தால் நடாத்தப்படும் மாதாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நெசவு, தும்பு, மரவேலை, மட்பாண்ட போதனாசிரியர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட அலுவலர் ப. ராகவன் கேட்டுள்ளார்; (உ)

### உரும்பிராய்க்கு எம்.பி விஜயம்

(கோப்பாய்)

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞ. கஜேந்திரகுமார் உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்திற்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்தனுடன் பாடசாலை சுற்று மதில் அமைப்பதற்கு ஒரு தொகைப் பணத்தை வழங்குவதாக உறுதி அளித்துள்ளார்;

இப் பாடசாலையில் இடம் பெற்ற துயரச்சம்பவத்தினால் மரண மடைந்த செல்வி துவாரகாவின் வீட்டிற்கு சென்று குடும்பத்தவருக்கு ஆறுதல் கூறியுள்ளார். (க-79)

### குடும்பஸ்தர் கொலை

(வாழைச்சேனை)

வாழைச்சேனைகல்மடுப்பிரதேசத்திற்குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்திச் சென்று கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் மாவடிச் சேனையைச் சேர்ந்த ஆட்டோச் சாரதி என்று பொலிசார்மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது.

இதேவேளை இதுதொடர்பான விசாரணைகளைபொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்; (க-10)

### பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் அடுத்த மாதம் 9 ஆம் திகதி பண்ணிசைப் போட்டி ஒன்றை வண்ணார் பண்ணை நாவலர் வித்தியாலயத்தில் காலை 9 00 மணியளவில் நடாத்த உள்ளனர்.

கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்ற அடிப்படையில் இடம்பெறும் மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் சைவ பரிபாலன சபை, 66 கல்லூரி வீதி நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்;

புண்ணிய நாச்சியம்மையார் நினைவு தினத்தை முன்னிட்டு இப் போட்டி நடாத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது; (க)

# ம. வி. முன்னணியின் ஆயுதங்கள் எங்கே?

### வினா எழுப்புகிறார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கவில்லை என மக்கள்விடுதலை முன்னணி குற்றம் சாட்டுகின்ற அதேவேளை, அந்தக் கட்சியிடம் இருந்த ஆயுதங்கள் தற்போது எங்குவைக்கப்பட்டுள்ளனஎனகாணி அமைச்சர் ராஜிதசேனரட்ண கேள்வி எழுப்பியுள்ளார்;

கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தை ஒத்தி வைக்கும் பிரேரணையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்படஅவ்வியக்கத்தின்எந்தவொரு உறுப்பினர்களையும் ஒஸ்லோ நாட்டிற்கு அனுமதிக்க கூடாதென மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா திஸ்ஸநாயக்கா தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்;

கடந்த காலத்தில் சட்டவிரோத ஆயுதங்களைசேகரித்து பலரை கொலை செய்த மக்கள் விடுதலை முன்னணி தற்போது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொள்வதில் எவ்வித தவறும்இல்லையெனவும் சுட்டிக் காட்டினார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலந்து கொள்ள இருப்பது இலங்கை அரசுக்கு கிடைத்த வெற்றி ஆகும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்; (க-8)

### நீர் தாங்கி அமைக்க முயற்சி

(சண்டிலிப்பாய்)

சாவல்கட்டு மகாத்மா சிறுவர்பாடசாலைக்கு 50ஆயிரம் ரூபா பெறுமதியான நீர்த் தாங்கிஒன்று அமைக்க சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது;

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (க-258)

# உயிர்கொல்லி நோய்கள் பரவ
# சுகாதாரச் சீர்கேடே காரணம்

## மாநகரசபை சுகாதாரப் பகுதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் குறிப்பாக மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிலபகுதிகளில் ஆட்கொல்லி நோய்களான டெங்கு, கொலரா, நெருப்புக் காய்ச்சல் மற்றும் வைரஸ் காய்ச்சல் போன்றன உண்ணும் உணவு, பருகும் நீர் போன்றவற்றினால் பரவுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட போதிலும், குறிப்பாக உணவு தயாரிக்கும் விற்பனை செய்யும் நிலையங்களில் சுகாதார சீர்கேட்டினாலேயே மேற்படி நோய்கள் பரவிவரும் சாத்தியம் அதிகரித்துள்ளதாகத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது:

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கும் உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் இனங்காணப்பட்ட சுகாதார சீர்கேடுகளைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென எம்மால் பிரத்தியோகமாகக் கோரப்பட்டுள்ள போதிலும் நிறுவன உரிமையாளர்கள் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் அவற்றினைச் செய்யத் தவறியிருப்பின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அந் நிலையங்களை சீலிட்டு மூடவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, சகல உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களை அதியுச்ச சுகாதார நிலையைப் பேண வேண்டும்: தவறின் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுதல் தவிர்க்கமுடியாததாகிவிடும்;

நோய்த்தடுப்பு நடவடிக்கையின் முதற்கட்டமாக உணவகங்கள்; தேநீர்க்கடைகள் போன்றவை தகுதி வாய்ந்த குழுவினரின் திடீர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு உயிர்கொல்லி நோய்களைப் பூண்டோடு ஒழிக்க உரிய நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக
# மாபெரும் எதிர்ப்பு போராட்டம்

## யாழ்.நகரில் கொடும்பாவி கொளுத்தப்படும்

(திருநெல்வேலி)

தற்போதைய சமாதான சூழ்நிலையை முன்னெடுப்பதில் தடைக்கல்லாக செயற்பட்டுவரும் ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக யாழ்ப்பாணத்தில் மாபெரும் எதிர்ப்பு போராட்டம் ஒன்று பெரும் எடுப்பில் நடாத்தப்பட உள்ளது.

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்திற்குமுன்னர் இடம்பெறஉள்ள எதிர்ப்பு போராட்ட பேரணி திருநெல்வேலிச்சந்தியிலிருந்து ஆரம்பமாகஉள்ளது.

பெரும்தொகையான மக்கள் கலந்துகொள்ளும் இவ் எதிர்ப்பு பேரணியில் ஜனாதிபதி சந்திரிக்காவின் கொடும்பாவி இழுத்துச்செல்லப்பட்டு யாழ் நகர்ப்பகுதியில்தீயிடப்படவுள்ளது.

ஐக்கியதேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையின்போது ஜனாதிபதி சந்திரிகாதான் ஒரு சமாதான விரும்பியாக தன்னைக் காட்டிக்கொண்ட போதிலும் உண்மையில் சமாதானத்தின் மீது நம்பிக்கையற்ற விதத்தில் செயற்பட்டு வருவதாக பலரும் குற்றம் சாட்டிவருவதும், இங்கு குறிப்பிடத்தக்கது; (க-43)

## கல்வி வலய அமைப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கல்வி வலய மட்ட அமைப்புக்கூட்டங்கள் முறையே இன்று 7ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை யா/இந்து மகளிர் கல்லூரியிலும் 8ஆம் திகதி புதன்கிழமை நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திலும் 9ஆம் திகதி வியாழக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் யாழ் மாவட்டத்தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில்நடைபெறவிருப்பதாக இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார். (உ)

## தொண்டர் ஆசிரியர் சங்க ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொண்டர் ஆசிரியர்சங்க ஒன்றியம்ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக மேற்படிஒன்றிய முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

வன்னி பெருநிலப்பரப்பு தொண்டர்ஆசிரியர் சங்கத்துடன், யாழ்; மாவட்ட தொண்டர்ஆசிரியர் சங்கத்தினரும் இணைந்து இவ் ஒன்றியம் உருவாக்கப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இனிவரும் காலங்களில் வடமாகாண தொண்டர்ஆசிரியர் சங்க ஒன்றியத்தின் ஊடாகவே சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பொலிஸ்மா அதிபரிடம் ஆணைக்குழு அதிகாரங்கள்

(கொழும்பு)

பொலிஸ் ஆணைக்குழுவிடம் உள்ள சில அதிகாரங்களை பொலிஸ்மாஅதிபருக்கு வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை தயாரிக்கப்படுகிறது.

இந்தச் சுற்றறிக்கை இம்மாத இறுதிக்குள் தயாரிக்கப்பட்டு விடும் என ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபய சூரிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பொலிஸ் திணைக்களத்திலுள்ள கீழ் மட்ட அதிகாரிகள் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, ஒழுங்குநடவடிக்கை தொடர்பான அதிகாரங்கள் என்பன பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக அண்மையில் பொலிஸ் ஆணைக்குழுவும் பொலிஸ்மா அதிபரும் பேச்சு வார்த்தைகள் நடத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது. (க-08)

# மீள்குடியமர்வுக் கோரிக்கை நியாயமற்றது
## ஜே.வி.பி. கூச்சல்

(கொழும்பு)

அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை நியாயமற்றது;

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச்செயலாளர் விமல் வீரவன்ச நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்;

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தகைய கோரிக்கையை மனிதாபிமான அடிப்படையில் விடுக்கவில்லை;

இதனை அடிப்படையாகக் கொண்டு அரசியல் மற்றும் இராணுவ அனுகூலங்களை பெறுவதற்காகவே அவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்;

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான நடவடிக்கைகள் தனியார் மயமாக்கல் கொள்கைகள், என்பனவற்றுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் நாளை கொழும்பில் பேரணியும் கூட்டமும்நடத்த திட்டமிட்டுள்ளதாகவும்விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## காரை நகரில் கணனிவகுப்புகள்

காரைநகர் தியாகராஜா மத்தியமகாவித்தியாலயத்தில் இம் மாத நடுப்பகுதி முதல் இரவு நேர கணனி வகுப்புகளும் ஆங்கில வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளதாக வித்தியாலய அதிபர் மு.சு. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்;

காரைநகர் பிரதேச மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் கணனி அறிவைப் பெறும் முகமாகவேஇம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது;

அத்துடன் இரவு வேளையில் ஆங்கில வகுப்புக்கள் மாணவர்களிற்கு மட்டுமே நடாத்தப்படும் என்றும் இதற்கு பெற்றோருடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்ட பின்னரே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்; (க-246)

# ஊடகவியலாளருக்கு வட்டுக்கோட்டையில் காணி

(திருநெல்வேலி)

வட்டுக்கோட்டைப் பகுதியில் ஊடகவியலாளருக்கு வீடமைப்பதற்கு காணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் ஊடகவியலாளர்களுக்கு வீடமைப்புதிட்டத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு முன்னாள் யாழ்: அரச அதிபருக்கு பணித்திருந்தபோதும் அரச அதிபர் காணிஏற்பாட்டினைச் செய்யவில்லை.

தற்போது இந்து கலாசார அமைச்சர் தி மகேஸ்வரனை ஊடகவியலாளர்கள்சந்தித்து கலந்துரையாடியதில் வீடமைப்பிற்கு காணி ஒழுங்கு கேட்கப்பட்டதையடுத்து அமைச்சரினால் வட்டுக்கோட்டையில் காணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது; (க-43)

# நுளம்புகளை ஒழிப்பதில் வன்னி நிபுணர் முனைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் ஏ-9வீதியின் இருமருங்கிலும் டெங்கு, மற்றும் மலேரியாநோய்களை பரப்பும் நுளம்புகுடம்பிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் வன்னி மாவட்ட பூச்சியியல் ஆய்வாளர் குழு கடந்த சனி முதல் ஈடுபட்டுள்ளது.

மலேரியாபிராந்தியவைத்திய அதிகாரி எஸ்.சயந்தன் தலைமையிலான இக் குழுவினர் பாதைகளின் இருமருங்கிலும் காணப்பட்ட நுளம்பு மற்றும் குடம்பிகளை ஒழிக்கும்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன் ஏ-9 வீதியூடாகபயணஞ் செய்யும் பயணிகளின் நலன் கருதிவீதியின் அருகில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளிற்குசென்றுபார்வையிட்டதுடன் சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர்; (க-10)

# விபத்து இழப்பீட்டு தொகை இம்மாதம் முதல்அதிகரிப்பு

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்றவர்களின் இழப்பீட்டுத்தொகையை அதிகரிக்க சமூக நலன்புரி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இது வரை காலமும் வழங்கப்பட்டு வந்த விபத்து இழப்பீட்டுத்தொகை இம் மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்குகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு மற்றும் சமைத்த உணவு நிவாரணங்களும், சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையுமே அதிகரிக்கப்படவுள்ளன.

இழப்பீடுகள் சம்பந்தமாக அதிகரிக்கப்படும் வீதங்கள் தொடர்பான சுற்றிக்கை அடுத்த வாரம் மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும என அமைச்சின் செயலாளர் வீ. ஜெயராஜசிங்கம் தெரிவித்துள்ளார், (க-08)

# வைத்தியசாலையிலிருந்த மூவர் கத்திக்குத்துக்கு இரை

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மூவர் வைத்தியசாலைக்குள்ளேயே கத்திக் குத்துக்கு இலக்கானதில் மரணமடைந்துள்ளனர்.

கடந்த சனி வைத்தியசாலைக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர் ஒருவரே இக் கொலைகளைச் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இனந்தெரியாத நபரினால் கத்திக் குத்துக்கு இலக்கான நபர்ஒருவர் அவ்விடத்திலேயே மரணமடைந்தார்;

ஏனைய இருவரும் அவசர சிகிச்சை பிரிவில்அனுமதிக்கப்பட்ட பின்னரே மரணமடைந்தனர்,

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸார் ஒருவரை கைதுசெய்துள்ளனர்; (க-8)

# மின்சாரம் தாக்கியதில் காட்டு யானைகள் பலி

(கொழும்பு)

மொறவெவபகுதியில்உள்ள விமானப்படை முகாமினை அண்டிய பகுதியில் 3 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கிய நிலையில் இறந்துள்ளன.

இம்முகாமிற்கு அருகே அதி சக்தி வாய்ந்த மின்சார வேலியின் அருகே யானை ஒன்று சென்றதாகவும்அப்போதுமின்சாரத்தினால் தாக்குண்டு வேதனை தாங்காது பிளிறியதாகவும்,

மேலும் அவ்விடத்திற்கு சென்ற மற்ற இரு யானைகளும் மின்சாரத்தினால் தாக்குண்டு இறந்துள்ளதாகவும் தெரியவருகின்றது, (க-10)


## "துர்க்கா துரந்தரி" வாழி பல்லாண்டே!

துர்க்கைத் தாயவளின் ஆலயத்து அறங்காவலராய்
தாயவளின் அன்பர்க்குத் தொண்டாற்றும்
தூயவராய்
துர்க்கைத் தேவியவள் புகழ்பரப்பும் நாவலராய்
திக்கற்ற குழந்தைகளை அரவணைக்கும்
அன்னையுமாய்
''துர்க்கா துரந்தரி'' யாய் சிவப்பணியே
சிந்தையெலாம்
கொண்ட எங்கள் தங்கம்மாத் தாயே! தெல்லியுறை
துர்க்கையவள் பதமலரைப் பணிந்து போற்றி நீவிர்
பல்லாண்டு வாழவருள் புரிகவென வேண்டுகிறோம்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

# ஆன்மீகப் பணியில் அன்னை தங்கம்மா

**தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே.பி) அவர்களின் 78 வது பிறந்தநாள் அறக் கொடை விழா இன்று நடை பெறுவதையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

பண்பாட்டின் பிரதான கூறாக விளங்குவது சமயம். இது நம்பிக் கைகள், சடங்குகள், ஐதீகங்களிற் தங்கியுள்ளது. குறிப்பிட்ட நாட்டில் குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது சமூக வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவிக்கும சடங்குகள், சம்பிரதாயங்கள் தத்து வக் கருத்துக்கள், கலை, கலாசாரம் யாவும் சமூகப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளே. இந்த வகையில் சமயம், சமயஞ்சார் இலக்கியம், கலை, அழகியல் என்று பண்பாட்டி னைப் பல்வேறு வகையில் விளங் கிக் கொள்ள முடியும். சமயம் மீதான மக்களின் நம்பிக்கைகள் சில காலங்களில் வலுவிழந்தும், சில காலங்களில் எழுச்சிபெற்றும் விளங் கியமை கண்கூடு. சமய நம்பிக்கைகள் தேய்வடையும் போது மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஆன்மீக ஈடுபாட்டையும் உண்டு பண்ணும் வகையில் இந்தியாவிலும் இலங்கை யிலும் தோன்றிய அவதாரபுருஷர்கள், மறை ஞானிகள், அடியார்கள், பேரறி ஞர்கள் என்று பலரை நாம் அறி வோம். இந்த வகையில் எத்தனையோ அறிஞர்களை இன்று நாம் நினைவு கூர்ந்து கொண்டாடுவது வழக்கம். அத்தகைய பின்னணியில் ஈழத்தில் யாழ்ப்பாண மண்ணில் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண் டாற்றிய நல்லூர் ஆறுமுக நாவலர் வரிசையில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் சைவத் தமிழ்த் தொண்டு பலராலும் விரந்து பேசப்படும் ஒன்று. எழுபத் தெட்டாவது அகவையில் கால் வைக்கும் அன்னை தன் வாழ்நாள் முழுவதும இத்தகைய கைங்கரியத் தில் ஈடுபட்டிருப்பது நம் அனைவரை யும் வியநது போற்ற வைக்கிறது.

### ஆசிரிய பணியில்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴து இலார் தோன்றலிற் தோன் றாமை நன்று''

என்ற வள்ளுவர் வாக்கு அன்னை யின் வாழ்விற்கு மிகவும் பொருத்த மான ஒன்று.கருவிலே திருவோடு தோன்றிய அன்னை தங்கம்மா அவர் கள் இளமைப்பருவம் தொட்டு இற்றைவரை சமய நம்பிக்கையிலும் இறையருளிலும் ஈடுபாடு கொண்டவர் தமது ஆசிரிய வாழ்வில் சைவத் திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்வ தையே கடமையாகக் கருதிய அவர், சமயப் பிரசங்கங்கள் மூலம் தன் பணியை மேற்கொண்டார். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அவரது கொள்கை 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலர் வாக்கு இவருக்குப் பெரிதும பொருந்தும். சமய உண் மைகளை யும், தத்துவக் கருத்துக்களையும் தூய தமிழில் அழுத்தமான உச்சரிப் புடன் ஆணித்தரமாக எடுத்துரைக் கும் வல்லமை இவரது சிறப்பியல்பு. நாவன்மையும் எடுத்த பொருளைத் திறம்பட ஒழுங்கு படுத்திப் பேசும் நேர்த்தியும் கால நேரத்தை அனுசரித்து, கேட்போர் உளப்பாங்கி னைப் புரிந்து பேசும் ஆற்றலும் அன்னையை மக்கள் மத்தியில் சிறந்த பேச்சாளராக நிலை நிறுத்தி யது. பேச்சு என்பது ஒரு கலை. எவ்வாறு ஒரு அழகான சிற்பத்தை, ஒரு ஓவியத்தை, ஒரு நடனத்தைப் பார்த்து ஒருவன் இன்பமும் மகிழ்ச்சியும் அடைகிறானோ அது போன்று அன்னையின் பேச்சு அனை வரையும் ஈர்க்கவல்லது கலைப்படைபயில் ஒன்றும் ரசிகர்கள் போன்று அன்னை தங்கம்மாவின் பேச்சில் ஒன்றிய மக்கள், ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும், மலேசியா சிங்கப்பூர் போன்ற ஏனைய நாடுகளிலும் வாழ்கி றார்கள் அன்னை அவர்கள தம் ஆன்மீகப் பணியினைத் தன் குரல்வளத் தினாலும், பேச்சு வன்மை யினாலும் வளர்த்த வரலாறு மிக நீண்டது.

## பிறநாடுகளிலும் பெரும்புகழ்பெற்ற பேச்சாளர்

### பிறநாடுகளில்

சமய தத்துவக்கருத்துக் களைப் பாமரமக்களும் அறிந்து பயன் பெறும் வகையில், புராண இதிகாச சம்பவங்களின் துணையுடன் விளக் கிச் செல்லும் ஆற்றல், சைவ சித்தாந்த தத்துவம், அவற்றுக்கு மூலமாய் அமைந்த வேதங்கள் ஆகமங்கள், திருமுறைகள் என்று எப்பொருளையும் ஆழமான புலமை யுடன் விளக்கும் திறன் அவருக்கு இயல்பாக அமைந்தவை. இத்தகைய பேச்சு வன்மையும் ஆன்மீகத் தொண் டும்அன்னையை ஈழத்துக்குள் மட்டு மன்றி வெளிஉலகிற்கும் அறிமுகஞ் செய்தது. அந்த வகையில் தமிழகத் திலும் சிங்கப்பூர், மலேசியாவிலும் அன்னையின் சமயச் சொற் பொழிவு கள் இடம் பெற்றதுடன் உலகளா விய ரீதியில் சமயத் தொண்டாற்ற அவருக்கு நல்ல சந்தர்ப்பத்தையும் வழங்கியது. அன்னையின் வாழ்வில் 1962-1985 வரையுள்ள காலப்பகுதி மிக உன்னதமான காலமாகக் கணிக்கப்படுகிறது.

1965இல் தமிழ் நாடு சென்று சைவ சித்தாந்த சமாச வைர விழாவில் 'மணிவாசகரின் ஞான உள்ளம்' எனும் பொருளில் ஆற்றிய உரை அன்னை தங்கம்மாவின் ஞானத் தையே வெளிப்படுத்தியது. தொடர்ந்து 1973 இல் திருவாவடுதுறை ஆதீன அழைப்பின் பேரில் திருவிடை மருதூரில் இடம் பெற்ற திருமுறை மாநாட்டிற்குத் தலைமை தாங்கி யமை அவரது. தலைமைத் துவப் பண்பினையும், ஆளுமை யையையும வெளிப்படுத்தியது. 1976இல் கும்பகோணத்தில் குடத்தைச் சிவனடியார் திருக்கூட்டம் எடுத்த திருமுறை விழாவில் 'பெரிய புராணமும் சைவசித்தாந்தமும்' என்ற தமிழர் தத்துவம் பற்றிச் சொற்பொழி வாற்றியதன் மூலம் அனைவரதும் பாராட்டையும் பெற்றார். 1977இல் திருவிடைமருதூரில் நடைபெற்ற திருவாசக விழாவில் 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து' என்ற அரிய பொருளில் உரை யாற்றியமை குறிப்பிடத்தக்கது. 1982இல் சைவசித்தாந்தப் பெருமன்றத தில் இவர் ஆற்றிய உரை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இவ்வாறு அன்னை தங்கம்மாவின் சமயச் சொற்பொழிவுகள், அவர் எடுத்துக் கொண்ட சொற்பொழிவுக்கான பொருள் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கும் போது சமயத்திலும், தத்துவத்தி லும், மொழியிலும் அவருக்கிருந்த புலமை புலப்படும். இத்தகைய புலமை வாய்ந்த அன்னை அவர்களுக்கு சமய நிறுவனங்கள் அளித்த பட் டங்களும் விருதுகளும் அவரின் பெருமையைப் பறைசாற்றுவன. சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானாகரம், திருவாசகக் கொண் டல் போன்றவை அவற்றுட் சில.

### துர்க்கா தேவி ஆலய நிர்வாகம்

அன்னையின் வாழ்வில் 1977 ஜனவரி 20 ஒரு நன்னாள் என்றே கூறவேண்டும். அன்று தெல்லிப் பழை துர்க்காதேவி ஆலயப் பணியை தலைமைப் பொறுப்பேற்று நிர்வ கிக்கத் தொடங்கிய அன்னை தங்கம்மா

திருமதி
கிருஷ்ணவேணி - எம்.ஏ
(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்)

இற்றை வரை அப்பணியைச் செவ் வனே செய்துவருவது குறிப்பிடத் தக்கது. துர்க்கையம்மாள் தேவஸ் தானத்தின் வளர்ச்சி அன்னையின் வாழ்க்கையுடன் தொடர்புடையது. அனைத்திற்கும் மேலாக 1982 இல் துர்க்காபுரம் மகளிர் இல்லம் அமைத்துத் தொண்டாற்ற முற்பட்டமை சமூக ரீதி யான அவரது தீர்க்க தரிசனத்தைப் பறைசாற்றி நிற்கின்றது. தொடர்ந்து தமது எழுபத்தைந்தாவது அகவை யில், 2000 ஆம் ஆண்டில் அன்னை யர் இல்லம் அமைத்து சமூகத்தில் முதியோருக்குப் புகழிடம் அளித்தது



அதிகரித்தமை அவரது தொண் டுகள் அனைத்திலும் உயர்ந்தது. துர்க்காதுரந்தரியான அன்னை அவர் களது சமூகத் தொண்டு காரண மாக இலங்கை அரசு அவருக்கு 'தொண்டு சீரமாணி' என்ற விருதுப் பெயரைக் கொடுத்து கௌரவித்தது. இவ்வாறு அவர் தம் சமயப் பணியும் சமூகப் பணியும் அவருக்குப் பல விருதுகளை வழங்கி அணி செய்தது என்றே கூற வேண்டும்.

### பல்கலை அளித்த பட்டம்

ஆசிரியப் பணி, சமயப்பணி, சமூகப்பணி என்று விரிந்து செல்லும் தொண்டின் மூலம் பலரது கவனத் தையும்,கருத்தையும் கவர்ந்த அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியமையும் அவரது வாழ்வில் அவரது ஆன்மீகப்பணிக் குக் கிடைத்த ஓர் உயர் அங்கீ காரம் என்றே கூறவேண்டும். எழுத்துத் துறையிலும் தனது பணியி னைத் தொடர்ந்தவர் அன்னை அவர்கள்.

இவ்வாறு பல்வேறு பணிகளிற் தன்னை ஈடுபடுத்தி இன்று எழுபத் தெட்டாவது அகவையை அடையும் அன்னை தங்கம்மா அவர்கள் ஓர் சிறந்த நிர்வாகியாக இருந்து ஓர் ஆலயத்தை சகல துறைகளிலும் வழிநடத்திச் செல்வது எம்மைப் பெருமையுறச் செய்கிறது. துர்க்கை அம்பாள் தேவஸ்தான நடவடிக் கைகள் ஒவ்வொன்றும் சைவத்தை வளர்த்த சோழப் பெருமன்னர் களது காலத்து கோயிற் பாரம் பரியத்தை எம் கண்முன்னாற் காட்சிப்படுத்துகின்றது என்று கூறின் அது மிகையில்ல.

இத்தகைய சிறப்புக்கள் அனைத் திற்கும் பொருளாக விளங்கும் எமது அன்னை தங்கம்மா அவர் கள் இறையருளுடன் நீண்ட காலம் வாழ்ந்து ஆன்மீகப் பணி செய்ய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்திப்போம்.

## கணனி அறை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் கணனி அறை அமைக் கப்படவுள்ளது.

இதற்கான நிதி பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து யாழ் மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-52)

## ஆற்றங்கரை வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

செல்வச்சந்நிதி முருகன் ஆலய ஆற்றங்கரை வீதி சுமார் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக் கப்படவுள்ளது.இதற்கான நடவடிக்கை களை வல்வெட்டித்துறை நகர சபை மேற்கொண்டு வருகிறது. (உ-52)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 10,11,12 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் திருவாசக முற்றோ தல் இடம் பெறவுள்ளது. (உ)

## கருணை இல்லம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பருத்தித்துறை பாமதி கருணை இல்லம் சுமார் ஒன்றேமுக்கால் இலட்சம் ரூபா செலவில் புனரமைக் கப்படவுள்ளது. (உ-52)

## நூல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீராம கிருஸ்ண சாரதா சேவாச்சிரம நூலகத்திற்கு நூல்கள் கொள்வனவுக்கென பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத் திலிருந்து 25ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-52)

## விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டு கழகத்திற்கு சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளை யாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (உ-52)

## கால் கோள் விழா

(புலோலி)


வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் ஒன்றில் மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழா எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற வுள்ளது.

அனுமதி பெறும் சகல மாணவர் களுக்கும் யுனிசெவ் நிறுவனம் அன் பளிப்பாக சிறுவர் புத்தகப்பைகளை வழங்கவுள்ளது. (உ-52)

# உயர் பாதுகாப்பு வலய விவகாரம் சமாதானத்திற்கு தடைக் கல்லாகாது

## பிரதமர் ரணில் நாட்டு மக்களுக்கு உரை

(கொழும்பு)



நாட்டின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தியையும் பற்றித் தீர்மா னிக்கும் முக்கியமானதொரு கால கட்டத்தை இலங்கை அடைந்துள்ளது.

இவ்வாறு பிரதமர் நேற்று முன்தினம் இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் தெரிவித்துள் ளார்.

பிரதமர் தொடர்ந்தும் உரையாற் றுகையில் நீண்ட காலமாக நாட்டில் இடம் பெற்று வந்த போரை முனைப்புச் செய்வதிலேயே கடந்த கால நிதி ஒதுக்கீடுகளும், செயற்பாடுகளும் இடம் பெற்றன.

ஆனால் எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்தியைத் தீர்மானிக்கக் கூடிய அளவுக்கு நாடு தற்போது பக்கு வப்பட்டு விட்டது.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத் தவதற்கென மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவும் தற்போது சுமுகமாக முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகளைக் காரணங்காட்டி சமாதானப்பிரச்சினைகளைச் சீர்குலைப் பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

கடந்த இருபது வருட கால இராணுவ நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட பயன்களை விட கடந்த ஒரு வருட காலத்தில் இராணுவ நடவடிக்கைகள் எதுவும் அற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் பலம் வாய்ந்தவை.

தமிழீழ விடுதலைப்புலிகளாலும், அரசாங்கத்தினாலும் கைச்சாத்தி டப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த வகையில் பலம் வாய்ந்த தாகக் காணப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில ஆயுதப்போராட்டத்தை கைவிடவும் சமஷ்டி முறை ஆட்சி முறையை ஏற்றுக்கொள்ளவும் உடன்பட்டுள்ளனர்.

வடக்குக்கிழக்குப் பிரதேசங்களில் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டமையும் அப்பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தப்பட்ட மையும் சமாதான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும்.

யுத்த நிறுத்த ஒப்பந்த நடை முறைச் சிக்கல்கள் தொடர்பாக இருதரப்பினரும் பேசித்தீர்வு காண வேண்டும்.

. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அரசியல் வழி முறைகளே பின்பற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருப்பது ஆக்கபூர்வமானது.

கிழக்குப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் ,சிங்கள மக்களின் கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (உ-8)

# இரு மாதகால இழுபறிக்கு முடிவு கட்ட ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)



அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள் ஐந்து பேரையும், இரு பிரதிஅமைசசர்களையும் நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இணங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனா திபதி நடத்திய பேச்சைத் தொடர்ந்தே மேற்படி ஏழு பேரின் நியமனத்திற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் சரத்சந்திரராஜகருணாவுக்கு வழங்கப் படவிருக்கும் பிரதி அமைச்சர் பதவி மாற்றியமைக்கப்படவுள்ளது.

அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர்க ளுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஜனாதிபதி எந்த நேரத்திலும் தயாராக இருப்பதாக ஜனாதிபதி செயலகம் பிரதமரின் அலுவலகத்திற்கு அறிவித் துள்ளது.

இவ்வமைச்சு பதவிகளை வழங்கும் விடயத்தில் கடந்த இரண்டு மாதங்களாக ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்து வந்த மையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஏ-9 வீதி இருமணிநேரம் ஸ்தம்பிதம்

(தென்மராட்சி)

நேற்றைய தினம் காலை ஒன்பது மணிமுதல் பதினொரு மணிவரை ஆனையிறவுப்பகுதியில், ஏ-9 பாதை யில் லொறி ஒன்று நடுவீதியில் புதைந் தமை காரணமாக இருபகுதிப் போக்கு வரத்தும் தடைப்பட்டிருந்தது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த வாகனங்களும், தென்பகுதி யில் இருந்து வந்த வாகனங்களும் இரு மணிநேரத்திற்கு மேலாக வீதியில் தரித்து நின்றன. இதனால் பயணிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர். (உ-77)

# இந்துகலாசார அமைச்சு ஏற்பாட்டில் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

இந்துகலாசார அமைச்சு இலங்கையில் உள்ள 10 மாவட்டங்களில் பொங்கல்விழாவை வெகு சிறப்பாக நடத்த உத்தேசித்துள்ளது.

இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

யாழ் மாவட்டத்திற்கான பொங்கல்விழா இம்மாதம் 15 ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதிவரை நெல்லிபடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டி பிரதேசசெயலகம் பருத்தித்துறை பிரதேச செயலகம் ஆகியன இப்பொங்கல் விழாவுக்கான அனுசரணையை வழங்கவுள்ளன.

(உ-16)

# மடு பிரதேசத்திற்கு தொ. பே. இணைப்புக்கள் மேலும் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற மடுப்பிரதேசத்துக்கு தொலைபேசி இணைப்புக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மடு பிரதேசசெயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பண்டிவிரிச்சான், பாலம்பிட்டி, தட்சணாமருதமடு, கள்மடு, இரணை இலுப்பைக்குளம் ஆகியபகுதிகளுக்கே புதிய இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

மடுப்பிரதேச செயலர் அலுவலகம், மடுத்தேவாலயம் உலகதரிசனம் நிறுவனம் ஆகிய வற்றுக்கு ஏற்கனவே தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# உணவுச்...

விஞ்ஞான வளர்ச்சி பல கொள்ளை நோய்களை அடியோடு ஒழித்து விட்டது. ஆனால் நவீன வாழ்க்கை முறை இருதயப் பாதிப்புகளை ஒரு கொள்ளை நோய் போலச் செய்து விட்டது. இன்றுள்ள சூழ்நிலை இருதயத்தையே அதிகம் பாதிப்பதாக உள்ளது. இதன் நடுவே வ ழும் நாம், வராமல் காத்துக் கொள்ளும் வழியில் தான் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

### வருமுன்காப்பது அவசியம்

உணவு, புகைபிடித்தல், உடலுக்கு வேலை கொடுக்காமலிருத்தல் ஆகிய மூன்றும், முக்கியமாகக் கவனிக்கப் பட வேண்டியவை. இருதயநோய் வந்து விட்டால் எப்போது மரணம் நேரும் என்பதைச் சொல்ல முடியாது. சிகிச்சையினால் அதை ஒத்திப்போடலாமே தவிர ஒரேயடியாகத் தடுக்க முடியாது. எனவே வாராமல் பார்த்துக் கொள்வதில் தான் அக்கறை காட்ட வேண்டும்.

இரத்தச் சுழற்சியில் இருதய நாடிகள் முக்கிய இடம் பெறுகின்றன. உடல் முழுவதற்கும் இருதயம் இரத்தத்தைப் 'பம்ப்' செய்கிறது. எல்லாச் செல்களுக்கும் இரத்தம்தேவைப்படுவது போலவே இருதயத்துக்கும் தேவை. அதைவழங்குபவை இருதய நாடிகள். இதன் வழியாக இரத்தம்செல்வதற்குத் தடை எதுவும் ஏற்பட்டால் அது ஆபத்தானதாக இருக்கும். மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இந்த நாடியில் பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று ஐயப்படுவது நியாயம் தான். ஆயினும் இரத்தம் பாய்வதில் தடை ஏற்படுவது எந்த நாடியில் வேண்டுமானாலும் நேரலாம்.

உடல் நலமாக இருப்பதற்கு இரத்தம் தடையின்றிச் சீராகப் பாய்ந்து கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் எல்லா உறுப்புகளின் திசுக்களுக்கும் செல்களுக்கும் வேண்டியது பிராணவாயுவும், ஊட்டச்சத்துக்களும் தடையின்றி கிடைத்துக் கொண்டிருக்கும். போதிய பிராணவாயு கிடைக்காமல் போகும் திசுக்கள் பாதிக்கப்படும். இப்பாதிப்புக்கள் நேராமல் இருக்க உடல் நலம் முழுமையாகப் பேணப்பட வேண்டும். எல்லாவகையிலும் ஒழுங்கான வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது இதன் பொருளாகும். ஒழுங்கான உணவு, உடற்பயிற்சி, நரம்புகள் பாதிக்கப் படாமல்கவனித்துக் கொள்வது ஆகிய அனைத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

# இடம்பெயர்ந்த மக்களை பொருட்படுத்தாது உயர் பாதுகாப்பு வலயங்களை அரசு தொடர்ந்தும் பேண வேண்டும்

## சிங்கள ஜாதிக சங்கமய தலைவர்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்கள் எமது பாதுகாப்புப் படையினரையும் பாதுகாப்பு நிலைகளையும், முக்கியமான ஆயுத உபகரண நிலைகளையும் புலிகளிடமிருந்துகாப்பாற்றுவதற்கென்று உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஐ. தே. மு. அரசு பாதுகாப்பு வலயங்களின் மீளாய்வுக் குழுவில் புலிகளை இணைத்துக் கொண்டுள்ளது.

இது திருடர் வருகையை எச்சரிக்கும் மணியை அடிப்பதற்கு ஒரு திருடனை நியமித்தது போல இருக்கிறது.

சிங்கள ஜாதிக சங்கமய என்னும் பேரினவாத அமைப்பின் தலைவரான எஸ். எல். குணசேகர சண்டே டைம்ஸ் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

அவர் அக்கட்டுரையில் மேலும் பல ஒரு தலைப்பட்சமானதும் இனவாதத்தைத் தூண்டுவதுமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தமிழ் குழுக்களை ஆயுதங்களை ஒப்படைக்க செய்து விட்டு அதன் பின்னர் நிராயுதபாணிகளாகிவிட்ட அக்குழுக்களை வடக்கு-கிழக்கிலிருந்து வெளியேறிவிடுமாறு புலிகள் நிர்ப்பந்திக்கின்றனர்.

1995 ஜனவரி 5 ஆம் திகதி ஜனாதிபதி குமாரதுங்கவுடன் பகைமை நிறுத்த ஒப்பந்தத்தை செய்து கொண்டு பின்னர் பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டுமென்றும், கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆயுதபாணிகளாக உலவ வேண்டுமென்றும் அடம்பிடித்தது. இதனை திருமதி குமாரதுங்க நிராகரித்ததும் புலிகள் ஒப்பந்தத்திலிருந்து முறித்துக் கொண்டு வெளியேறி தாக்குதல்களை தொடுத்தனர். அன்றைய வரலாறே மீண்டும் நிகழுமா? புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து தனது படைகளை கலைத்துவிடுவராயின் உயர் பாதுகாப்பு வலயங்கள் தாமாகவே கலைந்துவிடும். இயல்பு நிலையும் தோன்றிவிடும். மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகாவின் ஆலோசனைகளை புலிகள் ஏற்காவிடில், இடம்பெயர்ந்த மக்களின் குறைகள் வேதனைகளை பொருட்படுத்தாது உயர் பாதுகாப்பு வலயங்களை அரசாங்கம் தொடர்ந்து பேணுதல் வேண்டும். இடம்பெயர்ந்தவர்களின் வேதனைகளுக்கு மேலாக தமது உயிர்களையும், உறுப்புக்களையும் இழந்த படையினரின் வேதனைகள் மேலானதாக கருதப்படல் வேண்டும்.

தனியார் நிலங்களையும், வீடுகளையும் அரச தேவைகளுக்காக சுவீகரிப்பது காலனித்துவ காலத்திலிருந்தே எமது நாட்டில் பின்பற்றப்பட்டு வருகிறது.

இதனைப் பின்பற்றி உயர் பாதுகாப்பு வலயங்களால் தமது உடைமைகள் இழக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படல் வேண்டும்.

ஆனால் வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகையின் அரைவாசியை புலிகள் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். புலிகளின் பயங்கரவாதத் தாக்குதல்களின் காரணமாகவே உயர் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியேற்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்த மக்களின் துயரங்களை தீர்க்கும் கரிசனை புலிகளுக்கு இருந்தால் இதற்கு அவர்கள் ஆட்சேபனை தெரிவிக்கமாட்டார்கள் இவ்வாறு அவரது கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பொலிஸ் உயர் அதிகாரிகள் 22பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தை சேர்ந்த 22 உயர் அதிகாரிகள் இன்றுமுதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கமைய 13 பிரதிப் பொலிஸ் மாஅதிபர்கள் 5 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 4 பொலிஸ் அத்தியட்சகர்கள் இடமாற்றம்செய்யப்படவுள்ளனர்.

பொலிஸ் தலைமையகமக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றியன்சி பெரேரா இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இவ் இடமாற்றங்களின் பிரகாரம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக சிஸர மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியில் ஏற்கனவே இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் பொலிஸ் தலைமையக குற்றப் புலனாய்வு பிரிவுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார் (உ-8)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற அரச ஊழியர்களுக்கு சம்பள முற்பணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு ஒருமாதச்சம்பளத்தை முற்பணமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மாவட்ட மற்றும் பிரதேச செயலக ஊழியர்களுக்கு முற்பணம் வழங்க வென திறைசேரியில் இருந்து 50 இலட்சம்ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் அடிப்படைச் சம்பளத்தொகையை முற்பணமாக பெறும் அரச ஊழியர்கள் இதனை 10 தவணைகளில் மீளச் செலுத்த வேண்டும்.

வடக்கு-கிழக்கு மற்றும்வட மத்திய மாகாணங்களில் உள்ள 6 மாவட்டங்கள் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

அரச ஊழியர்களுக்கு சம்பள முற்பணம் வழங்குவதற்கான அங்கீகாரத்தை பிரதமர் ரணில் வழங்கியுள்ளார். உ-8

# ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களுக்கு மீண்டும் பணியாற்றச் சந்தர்ப்பம்

(பருத்தித்துறை)

மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 18 கிராம சேவை அலுவலர்பிரிவுகளில் 10 பிரிவுகள் வெற்றிடமாகவுள்ளன.

இதனால் பொதுமக்கள் பலத்த இன்னல்களையனுபவித்து வருகின்றனர்.

இதேவேளைஇப்பகுதிகளில் நிலவும் 10கிராமசேவை அலுவலர்கள் வெற்றிடமும் இளைப்பாறியகிராமசேவை அலுவலர்களைக் கொண்டு நிரப்பப்படவுள்ளது.

இதற்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன நேர்முகப் பரீட்சை மூலம் இவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(உ-52)

# அபி. நடவடிக்கைகளுக்காக கிராம மட்டத்தில் குழுக்கள்

(பருத்தித்துறை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென கிராம சேவை அலுவலர்கள்பிரிவு ரீதியாக கிராம மட்டக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இக்குழுக்களில் கிராம சேவை உத்தியோகத்தர் உட்பட 4பேர் இடம் பெறவுள்ளனர்.

இக்குழுவே இனிமேல்காலங்களில் இக்கிராமங்களில் புனர்வாழ்வு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நிவாரணம் வழங்கல், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளுக்கு பயனாளிகளைத் தெரிவு செய்தல் ஆகியன உட்பட பல நடவடிக்கைகளையும் இதுவரை கிராம சேவை அலுவலர்கள் மட்டுமே செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-52)

# மனித உரிமை மீறல் குறித்து உயர்நீதிமன்றில் 730 மனுக்கள்

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் 730 மனுக்கள் கடந்த வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2001 ஆம் ஆண்டில் 630 மனுக்களே மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் பொலிஸ் தாக்குதல்கள், அரச சேவைகளில் பதவிஉயர்வு மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பதவிஉயர்வுகளில் புறக்கணிப்பு போன்ற சம்பவங்களுக்கு எதிராகவே அதிகளவான மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளை எதிர்த்து 50 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் அரசாங்கப் பிரேரணைகளை எதிர்த்து 7மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை, அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 18,19 ஆவது அரசியல் திருத்த சட்ட மூலங்களை ஆட்சேபித்து 32 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (உ-8)

# மல்லாகத்தில் சமுர்த்தி வங்கி

(ஏழாலை)

தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவுக்கானசமுர்த்திவங்கி மல்லாகம் நீதிமன்றம் வீதியில் உள்ள தனியார் வீடு ஒன்றில் இந்த மாத நடுப்பகுதியில் இருந்து இயங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்த வங்கிக்கான கட்டுப்பாட்டுச் சபைத் தெரிவு அண்மையில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் திருமதி ஜயந்தி ஜேசுராசா தலைமையில் நடைபெற்றது. (உ-12)

# நிக்கொட் உதவியுடன் பரு. இல் புதிய சந்தை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை நிக்கொட்நிறுவனத்தின் உதவியுடன் பருத்தித்துறையில் நவீன சந்தையொன்றை நிர்மானிக்கவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை பொதுச் சந்தை தற்போது நாளில் மிக வசதிகள் குறைந்த நிலையிலேயே இயங்கிவருகிறது.

இதனால் பாவனையாளர்கள் பலத்த சிரமங்களையனுபவித்து வருகின்றனர். (உ-52)

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்
குறள்

# வலம்புரி

## சேவையின் சிகரமாக..

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு இன்று அகவை 78.

சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அறியாத உலகத்தார் இருக்க முடியாது. ஒரு மனிதம் எப்படி வாழவேண்டும் என்பதற்கு இலக்கணமாக விளங்குபவர் அவர்.

ஒரு கிராமத்தால் - ஒரு சமுகத்தால், ஒரு குழுவால் செய்யமுடியாத பணியை தனியொரு தாயாக நின்று அவர் செய்யும் சேவை நிச்சயம் தமிழர் வரலாற்றில் நிலையான காலப்பதிவாக அமையும் என்பது திண்ணம்.

யுத்த சூழ்நிலையில் காலத்தின் தேவையுணர்ந்து அன்னையவர்கள் ஆற்றிவரும் சேவை அளப்பரியது. 'பக்கத்தில் இருப்பவன் துன்பந் தன்னைப் பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி' என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு இலக்கணமாகத் திகழும் அன்னையவர்கள் ஏழைச்சிறுவர்களின் எதிர்கால வாழ்விற்காக ஆற்றும்பணிகள் வியப்பிற்குரியது. வெறுமனே ஆலயப்பணி, ஆன்மீக வழி என்றநிலையினின்று விலகி நாம் வாழும்சமூகத்தின்தேவை கருதி பணிபுரியவேண்டும் என்ற இலட்சியத்தோடு சேவை புரியும் அன்னையவர்களின் அறப்பணிகள் உள்நாட்டவர்களால் மட்டுமன்றி வெளிநாட்டவர்களாலும் போற்றப்படுகின்றது.

அன்னையின் பணியினால் எத்தனையோ ஏழைச் சிறுவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றப்பட்டது. கல்விக் கூடத்திற்கே செல்லமுடியாத பிள்ளைகளை பல்கலைக் சழகம் வரை செல்ல வைத்த அவரின் அர்ப்பணிப்போடுகூடிய தியாகம் அளவிடற்கரியது. ஏழைச் சிறுவர்களின் கல்விக்காக அவர் ஆற்றுகின்றபணி உதவும் உள்ளம் கொண்டவர்களுக்கு வழிகாட்டுவதாக அமைகிறது.

சிறுவர்களின் கல்விப் பணியோடு மட்டும்நின்றுவிடாது வயோதிபத்தால் வலுவிழந்த அன்னையர்களைப் பராமரிக்கும் பணியும் சிவத்தமிழ் அன்னையின் சீரியபணிகளில் ஒன்றாக இருப்பது பார்ப்போர் மனதை நெகிழவைக்கும். இத்தகைய சமூகப்பணிகளை ஆற்றும் அன்னையவர் இன்னமும் பல்லாண்டுவாழ நாமும் வாழ்த்துவோம்.

# உணவுச் சத்தை கிரகிக்கச் செய்வது இரத்தம்

# சீரான இரத்த ஓட்டம் உடல்நலத்துக்குத் தேவை

## மருத்துவ விளக்கம்

ஒருவருடைய உடல் ஆரோக்கியத்தில் மிக முக்கியமான பங்குவகிப்பது அவருடைய இரத்தமாகும். உடல் என்பது கோடிக்கணக்கான செல்களால் ஆனது. ஒவ்வொருசெல்லும் தனியான உயிரைக் கொண்டிருப்பதுடன் முக்கியமான பலவேலைகளையும் செய்கின்றன. செல்களின் இயக்கத்துக்குத்தேவையான பொருட்களை எடுத்துச் சென்று வழங்குவது இரத்தம் தான். செல்கள் வெளியேற்றும் கழிவுகளையும் அதுதான் அப்புறப்படுத்தவும் செய்கிறது.

### இரத்தத்தின் பணி

செல்கள் பலவகையானவை என்றபோதிலும் எல்லாவற்றுக்கும் பொதுவாகத் தேவைப்படுவது ஊட்டச்சத்து பிராணவாயு, ஹார்மோன், நீர் ஆகியவை ஆகும் சுவாசப்பை, உணவுப்பாதை, சுரப்பிகள் போன்ற பலவற்றிலிருந்து இவைகளை எடுத்துச் சென்று கொடுப்பது இரத்தம் தான் அத்துடன் நுண்ணுயிர்களால் உடலுக்கு ஏற்படக் கூடிய தீங்கையும் எதிர்த்து அழிக்கவேண்டியுள்ளது.

இரத்தம் 22% திடப் பொருள்களும் 78% நீரும் கொண்டது ஒருவரது உடல் எடையில் 14ல் ஒருபாகம் இதுஉள்ளது இரத்தத்தில் வெள்ளை, சிவப்பு ஆகிய இருவிதமான செல்கள் உள்ளன இரண்டின்பணியும்தனித்தனியானவை. சிவப்புசெல்கள் பிராணவாயுவை எடுத்துச்செல்கின்றன. வெள்ளை செல்கள்கிருமிகளால்ஏற்படக் கூடிய தொற்றை எதிர்த்துப் போராடுகின்றன. போராடவேண்டிய தேவை ஏற்படும் போது வெள்ளை செல்கள் நிறைய உண்டாகும் அமிலமும், காரமும் சமநிலையில் இருக்கும்படியும் இரத்தம் பார்த்துக்கொள்கிறது. சுரப்பிகள் வெளியிடும் ஹார்மோன்களும் தேவைப்படும் இடங்களுக்கு இரத்தத்தின் மூலமாகத்தான் செல்கிறது. அதற்கு உறையும்இயல்பும் உண்டு. உடலிலிருந்து இரத்தம் வெளியேறிவிடாமலும் இது தடுக்கிறது இயற்கையே ஏற்படுத்தித் தந்துள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

உடலில் எந்தநோய் ஏற்பட்டாலும் அதனால் இரத்தத்தில் சிறு மாற்றம் ஏற்படவே செய்கிறது. இரத்தத்துக்கு வேண்டிய ஊட்டச்சத்துக்கள் ஒழுங்காகக் கிடைத்துக்கொண்டிருந்தால் தான் அது தன்னுடைய முக்கியமானபணியை நன்கு செய்ய முடியும். சரிவிகித உணவு உட்கொண்டு வந்தாலே போதும். வேண்டியது கிடைத்துவிடும். நன்கு சுவாசிப்பதன்மூலம் தேவையான பிராணவாயுவும் கிடைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

### பரிமாற்றம்

இரத்தத்துக்கும் செல்களுக்குமிடையே பரிமாற்றம் இரத்த நுண்குழாய்களில் நடைபெறுகிறது. சவ்வூடு பரவல் முறையில் ஊட்டமும் பிராணவாயுவும் செல்களையடைகின்றன. செல்களின் கழிவுப்பொருள்கள் இரத்தத்தை வந்தடைகின்றன. உடலில் நடைபெறும் அதிசயமான நிகழ்ச்சிகளில் இது ஒன்றாகும். அதிகஉணவு அல்லது தவறான உணவுசேர்வதால் இப்பணி தடைப்படும். இங்கு நடைபெறும் பரிமாற்றம் தான் உடல்ஆரோக்கியத்துக்கே ஆதாரமாகஇருக்கிறது என்று கூறலாம். சூழ்ந்துள்ள திரவத்தில் செல்கள மிதந்தவாறு உள்ளன. அதன்இராசாயனஅமைப்பு மாறாமல் எப்போதும் ஒரேசீராகஇருப்பது அவசியம்.

நல்ல உணவு உண்டு அது செரிமானமாவது மட்டும் போதாது. உணவுச் சத்து செல்களால் கிரகித்துக்கொள்ளப்படவும் வேண்டும். ஜீரண உறுப்புகள் உணவைச் செரிக்கின்றன. கிரகிக்கும்படிசெய்வது இரத்தம்தான். தேவையான சத்தும் அதிகமாகக் கூடாது. கழிவுப் பொருட்களின் அளவும் அதிகரிக்கக் கூடாது. இரண்டும் குறிப்பிட்ட அளவில்இருக்கும்போது உடல் நலம் காக்கப்படுகிறது. கழிவுப்பொருள்கள் அதிகமானால் இரத்தவோட்டவேகம் குறையும். அதனால்உடலின் ஒவ்வொரு திசுவும் பாதகமடையும்.

### நோய்கள்

கழிவுப்பொருள்கள் நுரையீரல்களை அடைந்து வெளியேற்றப்படாமல் ஆங்காங்கே திசுக்களில்படிந்துதங்கிவிடும். அதனால் உண்டாகும்நோய்கள் தங்கும் இடத்துக்கு ஏற்பப் பெயர் பெறுகின்றன. மூட்டுக்களில் ஏற்படுபவை ருமேடிசம். ஆர்த்தரடிஸ் எனப்படுகிறது. சிறுநீரகத்தில் கல் ஆகிறது. நுரையீரலில் தங்கினால் மூச்சு சம்பந்தமான நோய்கள் உண்டாகின்றன. இரத்த நாடிகள் இறுகிப்போகும் இதனால் ஏற்படலாம்.

செல்களுக்கு இடையேயான திரவத்தின் இரசாயன அமைப்பு மாறாமல் இருக்கவும், அவை தாராளமாகஇயங்கவும் இரண்டு விஷயங்கள் முக்கியமானவை, முதலாவது உணவுச்சத்து ஒழுங்காக இருப்பது. இதுசில சமயங்களில் அதிகமாகிப் போய்விடுவதுண்டு, அதனால் ஏற்படக் கூடிய குறையைஒரிருநாட்கள் பட்டினி கிடந்து சரிப்படுத்திவிடலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் உணவு செல்லாத நிலை தானாகவே ஏற்படுகிறது. அப்போது உணவு அருந்தாமல் இருந்தாலேபோதும். விலங்குகள் கூட இவ்விதியைக் கடைப்பிடிக்கின்றன. மனிதன்தான் வேண்டா வெறுப்பாகவாவது வயிற்றில் அடைத்துக்கொண்டு அவதிப்படுகிறான்.

### இரத்தச்சுழற்சிமண்டலக் கோளாறுகள்

உடலின்எந்த உறுப்புபாதிக்கப்பட்டாலும் அதன்காரணமாக இருதயமும் ஒரளவு பாதிக்கப்படுகிறது என்பதை நினைவில்கொள்ளவேண்டும், அதேபோல இருதயத்தையும் இரத்தச்சுழற்சிமண்டலத்தையும் தாக்கும் நோய்கள் இதரபகுதிகளையும் பாதிக்கவே செய்யும் பொதுவாக இருதயத்துக்குஏற்படும்பாதிப்புகளை மூன்று பிரிவுகளாகக் கூறலாம். முதலாவது உயர் இரத்த அழுத்தம். இரத்த நாளங்கள் இறுகிப்போவதாலும், இரத்தக்கட்டிகள் உண்டாவதாலும் உயர் அழுத்தம் ஏற்படலாம். இளம்வயதில் மூட்டுவாத ஜுரம் வந்தால் வக்கிவுகள் பாதிக்கப்படுவதாலும்இதுநேரலாம். இரத்த நாளங்கள் இறுகிப்போவது முதுமையின் காரணமாகஏற்படுவதாகவே வெகுகாலம் வரை கருதப்பட்டுவந்தது. ஆனால்இளம் வயதினருக்கும் இந்த நிலை ஏற்படுவதால் முதுமைதான் அதற்குக்காரணம் என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை.

நாடிகள் தடித்துப் போவதால் இரத்தம்பாய்வதற்கான பாதைகுறுகிவிடுகிறது. இதன்காரணமாக இயல்பாக இரத்தவோட்டம் நிகழ்வது தடைப்படுகிறது.

இரண்டுகாரணங்களால்இது நேருவதற்கு வாய்ப்பு உள்ளது நாடிக்குள் கல்சியம் படிவதும், கொலஸ்ட்ரால் சேருவதும் தான் அவை. இதன் விளைவாக நாடிகளின் நெகிழும் தன்மை குறைந்து அவை இறுகி உறுதியாகி விடுகின்றன. தாராளமாக இரத்தம் பாய்ந்து செல்வதற்குத் தடை ஏற்படுகிறது.

### கொலஸ்ட்ராலும் உணர்வுப் பாதிப்பும்

கொலஸ்ட்ரால் என்பது இரத்தத்தில் எப்போதும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் அது நாடிச் சுவரில் தங்கி விடுவதால் தான் பாதை சிறுத்துப் போகிறது. நாம் உண்ணும் பல பொருட்களில் கொலஸ்ட்ரால் உள்ளது. ஓரளவுக்கு இது உடலுக்கு தேவைப்படவும்செய்கிறது. கொலஸ்ட்ரால் இல்லாத உணவாகப் பார்த்து உண்பது என்பது கடினமான விஷயம். உடல் கொலஸ்ட்ராலை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பது தான் முக்கியம். சரிவரப் பயன்படுத்தப் பட்டு விட்டால் அதனால் பாதிப்பு ஏற்பட இடமிருக்காது.

அச்சம், கவலை, ஏமாற்றம், அதிர்ச்சி, துக்கம் போன்ற காரணங்களால் ஏற்படும் நரம்பு, மற்றும் உணர்வுப் பாதிப்புகளும் இரத்தச் சூழற்சிமண்டலத்தைப் பாதிக்கின்றன. பயப்படும் போது ஏற்படும் தற்காலிக இரத்த அழுத்த உயர்வும் கூட நாடிகளை இறுகச் செய்து அவற்றின் இயல்பான செயல்பாட்டுக்கு கேடு விளைவிக்கலாம். உயர் அழுத்தம் ஏற்படுவதால் நாடிகள் இறுகிப் போகின்றனவா அல்லது நாடிகள் இறுகிப் போவதால் உயர் அழுத்தம் ஏற்படுகிறதா என்பது முக்கியமல்ல, ஒன்று இருந்தால் மற்றொன்று இருக்கவே செய்யும் என்பது தான் முக்கியம்.

### இருதயநோய்

பலருடைய உடல் பெருப்பதற்கு சில வகை உணவுகள் காரணமாக உள்ளன. மாவுப் பொருள்களும் சர்க்கரைகளும் தான் பெரும்பாலும் இத் தீங்கைச் செய்கின்றன. அளவுக்கு மேல் உடல் பெருப்பதன் காரணமாக இயல்பான இரத்த ஓட்டம் தடைப்படுவதும் அதனால் இருதயத்தின் வேலைப்பளு அதிகமாவதும் பல நோய்கள் வருவதற்கு வழி வகுக்கின்றன. புகைபிடிக்கும் வழக்கமும் இரத்தச் சூழற்சி மண்டலத்தில் நேரடிப் பாதிப்பைஏற்படுத்துகிறது. இரத்தத்தில் நிகோடின் சேருவதால் நாடிகள் இறுகிப் போகநேரும். புகைப் பிடிப்பவர்கள் இருதய நோய்க்கு ஆளாகும் வாய்ப்பு அதிகமாக இருப்பது நிச்சயமாக நிரூபணமாகி இருக்கிறது.

அன்றாட வாழ்வில் பல பொருள்களைப் பயன்படுத்துகிறோம். பல இரசாயனப் பொருகள் உடலுக்குள் சென்றுவிட வாய்ப்பு அதிகமாக உள்ளது. இந்த அந்நியப் பொருள்கள அதிக அளவில் உடலில் சேருவதாலும், நாடிகள் இறுகிப் போக இடமிருக்கிறது. பூச்சிகளைக் கொல்வதற்காகப் பயன்படுத்தும் டி.டி.ரி. பலருடைய தசைத் திசுக்களில் தங்கியிருப்பது அறியப்பட்டுள்ளது. உணவுப் பொருள்களைப் பதப்படுத்த பல இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளாலும் இரத்தம் பாதிக்கப்படலாம் எதற்கொடுத்தாலும்மருந்துகளைச் சாப்பிடுவதும்கூடத்தீயவிளைவுகளை உண்டாக்கலாம். பல சிறிய கோளாறுகள் தாமாகவேசரியாகிவிடக்கூடியவை. அதைப்போக்கும் ஆற்றலை இயற்கையேஉடலுக்கு அளித்திருக்கிறது. ஒரு நாள் பொறுத்துக் கொண்டால் இவற்றுள் பெரும்பாலானவை தானாகவே குணமாகி விடும், அதற்கு இடந்தராமல் கண்ட மருந்துகளையும், மாத்திரைகளையும் விழுங்குவது இப்போது ஃபாஷனாகி விட்டது.

**எஸ். சங்கரன்**

(8ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### பேரானந்தம்

பிறவிப் பயன் இறைவனை அறிவதாகும்; இதை ஒரு பொழுதும் மறவாதே;

அஹிம்சையைக் கைக்கொள் உண்மையே பேசு; தெய்வ நம்பிக்கை கொள்; எதையும் அவருக்காக வேசெய்; (ஈஸ்வரார்ப்பணம்) முழு பக்தியுடன் பிரார்த்தனை செய். மனம் இந்திரியங்கள் இவற்றுடன் சண்டையிட்டு அவற்றை இறைவன் பால் திருப்பு.

உன்கைகள் மூலமாக இறைவன் வேலை செய்கின்றார்; உன் கண்கள் மூலமாக அவர் பார்க்கிறார். உன் காதுகள் மூலமாக அவர் கேட்கிறார்; என்று நினைத்துக் கொள்; நீ பெரும் மாறுதல் அடைவாய்; உன்பார்வையே பரந்ததாகமாறும் நீ பேரானந்தம் எய்துவாய்;

சுவாமி சிவானந்தர்

## "புவியியலாளன் இதழ்" நாளை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அமரர் பேராசிரியர் செ.பாலச்சந்திரனின் திருவுருவப் பட திரைநீக்கமும், புவியியலாளன் இதழ் வெளியீட்டு விழாவும் நாளை பி.ப 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-5)

### கலைப்பீட...

இதனை மாணவர்கள் பரீட்சைப் பகுதியில் பார்வையிடலாம்

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தென்பகுதியைச் சேர்ந்த 24 பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் வருகை தந்துள்ளனர்.

அத்துடன் முஸ்லிம் மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயில ஆர்வம் காட்டி வருவதாகவும் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார். (இ)

## மாபெரும் இசைநிகழ்ச்சி

(கொழும்பு)

பிரபல தென்னிந்திய பாடகர் புஸ்பவனம் குப்புசாமி மற்றும் அனித்தா குப்புசாமி உட்பட தென்னிந்திய இசைக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 10ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நுகர்வோர் விவகார அமைச்சில் நடைபெற்றது. (த)

## கூட்டங்கள் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பாண, வடமராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கு இன்றும் நாளையும் நடைபெறவிருந்த கூட்டங்கள் பிற்போடப்பட்டுள்ளதாக சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை வலிகாம வலய மட்டக் கூட்டம் திட்டமிட்டபடி நாளை நடைபெறும் என்றும், யாழ்.வலயமட்டக் கூட்டம் 10ம் திகதி யாழ்.இந்துமகளிர் கல்லூரியிலும், வடமராட்சி வலயக் கூட்டம் எதிர்வரும் 13ம் திகதி நெல்லியடி ம.ம வித்தியாலயத்திலும் பி.ப 3 மணிக்கு நடைபெறும் என அவர் தெரிவித்தார். (ந-5)

### சர்வதேச நிதி...

குறித்தும் அதற்கான நிதிபெறும் மூலங்கள், சர்வதேச நிறுவனங்களின் உதவிகளை எவ்வழிகளில் பெற்றுக் கொள்வது, எவ்வாறு பயன்படுத்துவது, மற்றும் பொருளாதாரத் துறை அபிவிருத்திக்கான நிதிவைப்பு மூலகம் என்பன குறித்து விரிவாக பேசப்பட்டது.

இப் பேச்சுவார்த்தை முன்னர் இடம்பெற்ற பேச்சுக்களை விட சிக்கலானதாகவும் முரண்பாடுடையதாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதும், மிகவும் சுமுகமானதாகவும், வெற்றிகரமானதாகவும் முதல் நாள் பேச்சுக்கள் இடம் பெற்றதாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பேச்சுவார்த்தைக் குழுவில் அரச தரப்பில், குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பொருளாதார மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதான செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் இராணுவத் தளபதி சாந்த கொட்டகொட ஆகியோரும், விடுதலைப் புலிகள் தரப்பில் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா அம்மான், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், பொருளாதார நிபுணர் ஜோய் மகேஸ்வரன், ஆலோசகா உருத்திரகுமார் மற்றும் பேச்சுவார்த்தைக் குழுவின் செயலாளா திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரும், மத்தியஸ்தர்கள் தரப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெல்ஸ்பேக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் யப்பானில் மே மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான திட்ட வரைபினை உருவாக்குவது குறித்தும் விசேடமாக ஆராயப்பட்டது.

இதேவேளை அதியுயர் பாதுகாப்பு வலயம் குறித்து இன்றைய பேச்சுக்களில் ஆராயப்படவுள்ளது. (இ)

### வலி. வடக்கு...

தெரிவித்த வலி. வடக்கு மக்கள் ஒன்றியத் தலைவர் சிவமகாராசா, தமது போராட்டம் குறித்து அரச அதிகாரிகள் எவரும் கரிசனை காட்டவில்லை எனக் கவலை வெளியிட்டார்.

அதேவேளை மறியற் போராட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளை அங்கு சென்ற பொலிசார் பிரதேச செயலகப் பணிகள் தடங்கலுறாமல் போராட்டத்தை மேற்கொள்ளுமாறு பணித்ததுடன், செயலகத்தின் ஒரு பக்க வாயிலைத் திறந்தும் விட்டனர்.

ஆனால் செயலக ஊழியர்கள் எவரும் அங்கு செல்லவில்லை.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் பொதுமக்களின் கோரிக்கை தொடர்பாகக் கேட்டறிந்து சென்றனர். (த-43,12)

### சமாதானக்...

கள் மற்றும் கிராமங்கள் தோறும் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும், சமாதானத்தை பாதுகாக்கும் அமைப்பொன்றை உருவாக்குவதென்றும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்விடயம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கவென, அமைச்சர்கள் குழுவொன்று உருவாக்கப்பட்டது.

இக் குழுவில் அமைச்சர்கள் ராஜித சேனாரட்ண, பந்துல குணவர்த்தனா, எஸ்.பி.திஸநாயக்கா ஆகியோர் அடங்குகின்றனர்.

அத்துடன் சமாதானத்தை பாதுகாக்கும் குழுவில், இடதுசாரிக் கட்சிகளையும் இணைக்கும் முயற்சியை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்த பந்துல குணவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

### உயர் பாதுகாப்பு...

இதேவேளை உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான புலிகளின் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாளை கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று ஜே.வி.பியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. (இ)

## விளையாட்டுச் செய்தி

யாழ். உதைபந்தாட்டப் போட்டி

### பாஷையூர் சென். அன்ரனீஸை ஊரெழு றோயல் அணி வென்றது

(சுண்டுக்குளி)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட உதைபந் தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில பாஷையூர் சென் அன்ரனீஸ் அணியை ஊரெழு றோயல் அணி ஒரு கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நேற்று முன் தினம நடைபெற்ற இப போட்டியில், கொடுக்கப்பட்ட நேரத்தினுள் இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை

இந்நிலையில் இரு அணிகளுக்கும் தலா ஐந்து மேலதிக உதை கொடுக்கப் பட்டபோது ஊரெழு றோயல் அணி பாஷையூர் சென் அன்ரனீஸ் அணியை 4:3 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டி யுள்ளது. (த-110)

### இராணுவ...

புலிகள் தரப்பில் மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் றெஜினோல்ட், தளபதி பிரபா ஆகியோரும், படைத் தரப்பில் கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனித் பால சூரிய, மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப் பதிகாரி கேணல் ராஜித டி.சில்வா மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். (இ)

### உப குழுக்களின்...

அதற்கு ஏற்ற வகையில் உடனடித் தீர்மானங்களை எடுப்பதற்கு வசதியாகவே உபகுழுககளுக்கான அதிகாரங்கள்ளை அதிகரிப்ப தற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது,

### யப்பானிய அமைச்சர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வந்த யப்பானிய அமைச்சர் யூரிக்கோ கவாக்குச்சி நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்

இங்கு வந்த அமைச்சர் சர்வதேச உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வரும் சாவகச்சேரி மற்றும் அரியாலைப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். (ந-43,5)

அதேவேளை பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு உபகுழுக்களினால் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களை உடன்டியாக நடைமுறைப் படுத்துவது தொடர்பிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (த)


THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 10,11 ஆரம்பம
வகுப்பில் தனித்தனிக் கவனம
10 மாணவர்கள் மட்டும்
சிறந்த ஆசிரியர்கள்
426(302) K.K.S ROAD JAFFNA
(6333)

ராஜா
யாழ்ப்பாணம்
01.01.2003 முதல்
முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
சுந்தரா ரவல்ஸ்
10.30, 2.30, 6.30
(C/5524)

பிரத்தியேக வகுப்பு
PERSONAL CLASS
விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்
SCIENCE & TECHNOLOGY
தரம் - 9,10,11
செய்முறை விளக்கங்களுடன் அனுபவங்களினூடான கற்றல் கற்பித்தல் வகுப்புக்கள்
ஆரம்பமாகி விட்டது
ஆசிரியர்
திரு.செ.இளங்கோ
திவ்விம் கலட்டிலேன் கோண்டாவில் மேற்கு
குழு வகுப்புக்களும் நடைபெறும்

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI
இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்
நீங்கள் கொள்வனவு செய்யும்

DSI

பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் (SHOES)
ஒவ்வொன்றிற்கும் ஒரு நபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின் யாழ் குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES சுப்பர் சூஸ்
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
[C/5548]
DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

பதவி வெற்றிடம்
விடுதிக்காப்பாளர்
* கல்வித் தகைமை : பட்டதாரி
* முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்
* வயதெல்லை : 35 - 60
* விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்
* இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும் வழி காட்டுதலிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுதல் வேண்டும்
* தொண்டுதியம் பேசி நிர்ணயிக்கப்பட வேண்டும்
அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி
10.01.2003
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
சோ.பத்மநாதன்
செயலாளர்
[C/5607]


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் பிரதம குருவும், தும்பளை லட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதமகுருவும், ஆதீன கர்த்தாவும், ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும் அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை பொருளாளரும், யாழ்/திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க சமய திட்டப் பணிப்பாளரும், இலங்கை சைவ சித்தாந்த பண்டிதர் சங்க பொருளாளருமான சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

### "சித்பவன்"

31.12.2002 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தமையிட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு நெஞ்சம் கலந்து அஞ்சலியைச் செலுத்துவதோடு எமது பேரவையின் சார்பில் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

க.சோமசுந்தரம்
செயலாளர்
அனைத்துலக சைவக்குருமார்
அர்ச்சகர் பேரவை ஒன்றியம்

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

(6423)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.